முரசொலி

வார இதழ்.

ஆசிரியர் மு. கருணாநிதி. 2 அணா

முரசு 2 | சென்னை | 23-9-55 | வெள்ளி | ஒலி 26

குறளோவியம்

கருணா

முல்லை மலர்க் காட்டில் மெல்லியலாள் மெய் தழுவிக் கிடந்த காதலன் பிரிகிறான். வாலிபத்தின் விருந்தை இடையறாது சுவைக்கும் வாய்ப்பை இருவருமே இழந்து தவிக்கின்றனர். வாணிபம் குறுக்கிடுகிறது. ஆகவே பிரிகிறார்கள். 'தலைவனை அணைத்திருக்கும்போது அவன் சிறிது நகர்ந்தாலே மேனி யெங்கும் பசலை நிறம் படர்ந்து என்னை வாட்டுமே; அப்படிப்பட்ட என்னைவிட்டு அவர் இத்தனை நாள் பிரிந்து செல்வது நியாயமா?" என்ற கேள்விக் கணைகளைத் தொடுக்கிறாள், கண்ணாடிக்கு முன்னே நின்றுகொண்டு! அந்தப் பளிங்கிலே தோன்றும் உருவம் அவளை மேலும் அழவைக்கிறது. ஏனெனில் பசலை படிந்த அவளது உருவமே அது! அதைக் காணுகிறாள். கண்ணீர் முத்துக்கள் உருள்கின்றன. இதழிடை முத்துக்கள் எங்கேயோ ஒளிந்துகொள்கின்றன. பிரிவின் சோகத்தால் காதலன்மீது ஏற்பட்ட கோபத்தோடு படுக்கையிலே படுக்கிறாள். இல்லை; விழுகிறாள். உடலைப் 'பொத்'தென்று போடுகிறாள். தூக்கம் அவளைத் தொட முடியாமல் தவிக்கிறது. இறுதியில் வெல்கிறது. தூங்குகிறாள்.

காதலன் வருகிறான். அவனது கற்பகம் சேர்ந்த மார்பில் அற்புத அழகு முகத்தை ஒட்டுகிறாள். உச்சி முதல் உள்ளங்கால் வரை முத்த மழையால் நனைகிறது! நேரம் போவதே தெரியவில்லை. தொடர்ச்சி கெடாமல் இன்பம்! கேளிக்கை! கீதம்! திடீரென்று விழிக்கிறாள்; அவளோடு சேர்ந்து கதிரவனும் விழிக்கிறான்; எல்லாம் கனவு! கலக்கத்தோடு வாயிற் புறத்தே வந்து நிற்கிறாள்.

அவளைக் கண்ட ஊர் மக்கள், "அய்யோ பாவம்—காதலன் பிரிந்து விட்டான். அதனால் கலங்கி நிற்கிறாள் இந்தப் பாவை!" என்று பேசிக் கொண்டு போகிறார்கள்.

காதலன்மீது ஊரார் பழி கூறுவதாக அவள் கருதுகிறாள். அவன்மீது பழி கூற தன்னைத் தவிர வேறு யாருக்கும் உரிமையில்லை என்பது அவள் எண்ணம். பிரிந்து போன காதலனைப் பற்றி பழி கூறும் ஊராரைப் பழிக்கிறாள். எப்படி?

"என்னைவிட்டு என் காதலர் நீங்கியிருப்பதாக அவரைக் குற்றம் சாட்டுகிறார்களே இந்த ஊரார்—இவர்கள், பிரிந்து சென்ற காதலனை கனவில் காண்பது கிடையாதோ?" என்று வியப்படைவது போல கேலி பேசுகிறாள்.

இதோ குறள்:-

"நனவினால் நம்நீத்தார் என்பர்; கனவினால்
காணார்கொல் இவ்வூ ரவர்?"

Best copy available

★ மகேசன் புராணத்தில் ★ ‘மனிதத்துவம்’ எங்கே?

சர்க்கரையிலே இனிப்பு இருப்பதும், ஜீவாவிடம் தமிழுணர்ச்சி இருப்பதும், அதை ஒடுக்க ராமமூர்த்திகள் ராஜ தந்திரம் செய்வதும் எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை பாரதியார் ஒரு தேசியக் கவி என்பதிலும் இருக்கிறது.

சோஷலிசபாணி என்னும் ‘பேட்ஜை’க் குத்திக்கொண்டு, நேரு ரஷ்யாவிலே பெற்ற நேர்த்தியான வரவேற்பு ஜனசக்தி மைந்தர்களுக்கு ‘மரண அடி’ கொடுத்தது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை பாரதியார் ஒரு புரட்சிக்காரர் என்பதிலும் புகுந்துகொண்டிருக்கிறது.

பாரதியார் பாட்டிலே புதுமை இருக்கிறது; இனிமை காணப்படுகிறது. எனவேதான் கரும்புச் சக்கையை ருசி பார்த்துக்கொண்டிருந்த எறும்புகளெல்லாம் இப்போது அவருடைய தேன் கவிதைத் துண்டுகளின்மீது மொய்க்கத் துவங்கிவிட்டன.

இப்போது ஜீவாகூட நெற்றியிலுள்ள நாமத்தை அழித்துவிட்டு, சீதாராம பஜனைக்கு ஓய்வு அளித்துவிட்டு, பாரதியாரின் கவிதைக்கு முன்னுரை எழுதி அதைத் தமிழ்நாட்டுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார்!

அது மட்டுமா? ஜனசக்தியார் பாரதியைச் சாக்கு காட்டி நம்மை வம்புக்கிழுக்க ஜல்லடம் கட்டுகிறார்.

“தமிழ்நாட்டின் பல கட்சிகளும், கலை இலக்கியக் கழகங்களும் தேசியக் கவி சுப்ரமணிய பாரதியின் தினத்தைக் கொண்டாடும்போது, தி. க., தி. மு. க. போன்ற கட்சிகள் ஏன் கொண்டாடுவதில்லை?”

—இது ஒரு கேள்வியின் முற்பகுதி. சென்ற வார ஜனசக்தியில் வந்திருக்கிறது.

இதற்கு விஞ்ஞான ரீதியாக, எதார்த்த ஞானத்துக்குக் கட்டுப்பட்ட, ரஷ்யாவும்—வடநாட்டுத் தலைமை பீடமும் அங்கீகரிக்கக்கூடிய சுருக்கமான பதிலைத் தீட்டியிருக்கலாம், ஜனசக்தியாருக்கு நம்மைத்திட்டவேண்டிய நினைப்பு ஏற்பட்டு, பிறகு நம் கையினால் குட்டப்பட வேண்டியதையும் விரும்பாமலிருந்தால்! என்ன செய்வது; மலையிலே மோதவேண்டும்; மயங்கி விழவேண்டும்—என்று நினைக்கிறார்களே!

“தி. மு. க. ஏன் தனியாக வேறு விழா கொண்டாட வேண்டும்? அவர்கள்தான் பாராட்டுகளைக் குவித்திருக்கிறார்களே”—இப்படிக் கூறியிருக்கலாம்.

“பாரதியார் மூவர்ணக் கொடியை—இராட்டை பதித்தது என்பதை நினைவிலிருத்துங்கள்!—தாயின் மணிக்கொடியாக நினைத்துத் தலை வணங்கியவர். செங்கொடியைத் தூக்கியிருக்கும் நாம் பாரதியைக் கொண்டாடி கை இராட்டினத்துக்கு கை தூக்கிப் பணிவோமா? அதைப் போலத்தான் தி. மு. க. பாரதியாருக்கு தமிழ்க் கவிஞர் என்ற வகையில் அவர் எழுத்துக்கு தாமரைசூட்டுகிறது”—இப்படி விளக்கவுரை தந்திருக்கலாம், தூற்றவேண்டும் என்ற விக்கல் எடுக்காமலிருந்தால்!

சரி; கேள்வியின் பிற்பகுதியைப் பாருங்கள்—“பொதுஜன அபிப்ராயத்துக்குப் பயந்து பாரதி விழாவில் தப்பித் தவறி கலந்துகொள்ள வந்தாலும், திரு. அண்ணாதுரை சென்னை ராயபுரத்தில் பேசியது போல ‘அழகான மாளிகையை அதன் சொந்தக்காரர்கள்தான் புகழ வேண்டுமென்பதல்ல—வெளியாரும் புகழலாம்’ என்று பாரதியைப் பொருத்த வரையில் தங்களை “வெளியார்கள்” என்று சொல்லிக் கொள்ள காரணமென்ன?”

—தி. க., தி. மு. க. போன்றவர்கள் ஏன் கொண்டாடுவதில்லை?—முதற்பகுதியில்!

திரு. அண்ணாதுரை சென்னை ராயபுரத்தில் பேசியது போல... —இது பிற்பகுதியில்!

—இரண்டிற்கும் இடையே மோதிலால் மைந்தர் மார்ஷல் புல்கானினை சந்திப்பதற்கு முன்னால் இருந்த கம்யூனிஸ்ட் கட்சிக்கும், அதற்குப் பின்னால் சின்னாபின்னமடைந்திருக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் உள்ள வேறுபாடு இருக்கிறது.

பெரியார் ராமசாமி இந்தியாவின் தென் பகுதியில் பகுத்தறிவுப் பரிதி உதயமாகும் கீழ்வானமாக இருந்தார்—பாரதி விழாவைக் கொண்டாடச் சொல்லும் ஜனசக்தியார் பெரியார் பிறந்த நாள் கொண்டாடினார்களா? இனியாவது கொண்டாடுவார்களா?

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எக்கட்சியினரும் ஏற்றிப் போற்றும் தேமதுரப் பாட்டுகளைத் தீட்டியவர்; ‘காண்பதெலாம் தொழிலாளி செய்தான்—அவன் காணத் தகுந்ததும் வறுமையாம்; அவன் பூணத் தகுந்ததும் பொறுமையாம்’ என்று கூறி இடியென அதிர்ந்து, எதிர்த்து நின்ற மடைமை மரங்களைக் கறுக்கியவர் — ஜனசக்தி அவருக்காக அனுபந்தமொன்றை வெளியிட்டு அந்தக் கவிக்கோவின் கனிப் பாக்களைக் கொண்டாடிற்று?

திரு. வி. க.வை தொழிலாளர் தலைவர் அல்ல என்று கூறுவதற்கு ஜீவாவுக்குக் கூட துணிவு கிடையாது. கம்யூனிஸ்ட் கட்சியிலே தீர்மானம் போட்டு அந்த தீரனின் நினைவுநாளைக் கொண்டாடுவார்களா, இன்று நம் காதிலே துரும்பேற்றும் குறும்பர்கள்?

அண்ணா அழகான மாளிகையை வெளியாரும் புகழலாம் என்கிறார்! இது நம் கொள்கை! ஜனசக்தியாரோ அழகான மாளிகையில் வெளியாரும் புகுந்து—புகல் தந்தவனின் குரல்வளையையும் நெறித்துவிட்டு குடியிருக்கலாமென்கிறார்!—இது ரஷ்யப் பாதை; புல்கானின் போதனை; லெனினிசத்தின் எசென்ஸ்!

—இந்த நிலையில் எப்படி அவர்கள் நம்மோடு ஒத்து வர முடியும்? இந்த ‘பல்டிக்காரர்’களின் பாரதி பக்தியைக் கொஞ்சம் வெளிச்சத்தில் பாருங்கள்:

“இன்று ஜனயுகத்தில் நாம் வாழ்கிறோம். நமக்கு மிக மிகத் தேவையான இலக்கியமும், கலையும் மக்கள் இலக்கியமாகவும், மக்கள் கலையுமாகவே இருக்க வேண்டும். அவைகள் ஜனநாயகத் தன்மை கொண்டவைகளாகவும், எதார்த்தமும் மனிதத்துவமும் உடையவைகளாகவும், அதே பொழுதில் தேசியத் தன்மை உடையவைகளாகவுமே இருக்கவேண்டும்”—இவ்வாறு சீனத்தின் தலைசிறந்த கவிஞரும், எழுத்தாளருமான, சீனக் குடியரசின் உதவித் தலைவர்களில் ஒருவருமான கொ-மோ-ஜோ கூறுகிறார்.

“இந்தத் திசையில் பாரதி நமக்குத் தகுந்த முன்னோடி; சிறந்த வழிகாட்டி” என்று பாரதியை நன்கு ஆழ்ந்து படித்தறிந்து நிர்ணயித்துக் கூறுகிறார் தோழர் ஜீவா.

—இது ஜீவா தொகுத்த ‘பாரதி பாடல்கள்’ பற்றி ஜனசக்தி எழுதியிருக்கும் ‘புத்தக விமர்சனம்!’

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கனவுக்கும் நனவுக்கும் திராவிடம் மூச்சு!

சென்னை 23—9—55 வெள்ளி

'தட்சணை'ப் பிரதேசம்!

மொழியுணர்ச்சி மலர்ந்து மணம் வீசத் துவங்கியிருக்கும் இந்த நல்ல தருணத்திலே, தாயைக் கொன்று புதைக்கும் பரசுராம வடிவம் ஏற்றிருக்கிறது, பலம் பொருந்திய ஏகாதிபத்ய அமைப்புக்கு ஆலவட்டம் சுழற்றும் டெல்லி பீடம்!

தட்சிணப் பிரதேசம்—என்று பெயராம். அந்தக் கூடாரத்திலே கன்னடம் வழங்கும் மைசூரும், மலையாளம் பேசும் திருவாங்கூர்-கொச்சியும், தமிழை உயிராகக் கொண்ட சென்னையும் சேர்த்து வைக்கப்படுமாம். இந்தப் பொருந்தா மணத்துக்கு புரோகித வேலை பார்க்கப் போகிறாராம் பூவுலகம் சுற்றி, புகழ் பெற்றாலும்கூட புது டில்லியிலே இடம் பெற முடியாத கிருஷ்ணமேனன்! பார்வையாளர்களாய் இருந்து பாராட்டு வழங்குகிறார்களாம், தமிழ்நாட்டு காங்கிரஸ்காரர்களும், சில பார்லிமெண்ட் அங்கத்தினர்களும்! — இப்படி ஒரு வேடிக்கையான விடுகதையை நாட்டிலே நடமாட விட்டிருக்கிறது 'மெயில்' பத்திரிகை!

மொழியை முதுகெலும்பாகக் கொண்ட மாநிலங்களை உருவாக்கப் போவதாகச் சொன்னார்கள்—மகிழ்ந்தோம் நாம், மக்கள் கிளர்ச்சி மணிமண்டபம் ஏறியவர்களால் மதிக்கப் பெறுகிறதே என்பதற்காக!

அதை அமுல் நடத்த ஒரு கமிஷனை அமைத்தார்கள் — அதுவும் ஆனந்தமாகத்தான் இருந்தது ஆரம்பத்தில்!

ஆனால் அதிலே ஏகாதிபத்ய வெறியர்கள் சிலர் இடம் பெற்றனர்; மொழிவாரி மாநிலக் கொள்கையின்மீது மண்வாரி இறைத்தோர்; ஏக இந்திய பீடத்திலே இளமை குன்றா மொழிகளை பலி கொடுக்க நினைப்போர்—இவர்களையெல்லாம் உறுப்பினர்களாகச் சேர்த்து உள்ளக் கிடக்கையை வெளியிட்டுக்கொண்டது, வடநாட்டு ஆட்சிபீடம். —நாம் வேதனைப் பட்டோம்.

ராஜ்யச் சீரமைப்புக் கமிஷன் தாய்மொழித் தாகத்துக்குத் தண்ணீர் தரும் நிலையிலே இல்லை; தட்சிணப் பிரதேசம் என்னும் தணலைக் கொட்டியிருக்கிறது.

இந்த அலங்கோல அமைப்புக்கு ஆந்திராவின் ஆலிங்கனம் இருக்காதாம்; மாறாக ஐதராபாத் துண்டாடப்பட்டு 'விசால ஆந்திரம்' ஏற்படுமாம்—கோபால ரெட்டி கொக்கரிக்கிறார், இப்படி!

இங்கோ; பதவி மோகம் கொண்டு, மேனன் இனத்தவரின் கூட்டோடு 'தட்சிணப் பிரதேசம்' செய்யப் போகிறார்களாம்! — தாவிக் குதிக்கிறார்கள், தாசானு தாசர்கள்!

"தட்சிணப் பிரதேசம் நீங்கள் கேட்கும் திராவிடத்தின் குழவிப் பருவம்தானே; ஆந்திரத்தையும் நீங்கள் சேர்த்துக் கொண்டால் உங்கள் அவா பூர்த்தியாகிவிடுமே"—என்று சிலர் கேட்கலாம்.

ஆமாம்; உண்மைதான்! திராவிடத் தனியரசில் தட்சிணம் என்னும் தென்னகம்தான் அடங்கியிருக்கும்—ஆனால் அது வடநாட்டுக்குத் தட்சிணை தருவதாக இருக்காது.

ஆந்திரத்திலே தெலுங்கராட்சி இருக்க; கர்நாடகத்திலே கன்னடம் கொலுவிருக்க; மலையாளம் அதன் சொந்தப் பகுதியிலே மகுடம் புனைந்திருக்க; தமிழ் தனித்திருக்க—இவை யாவும் சேர்ந்த கூட்டாட்சிதான் நாம் கேட்கும் திராவிடம்; எல்லாம் இணைந்த **ஒரே உறுப்பு அல்ல!**

—இதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும், கலங்கிய மதி படைத்தோர்!

தட்சிணப் பிரதேசம் மேயர் சிதம்பரனாரின் மேதா விலாசத்துக்கு உகந்ததாக இருக்கலாம்—முதலாளித்வ முகாம் விரிவடையுமே என்ற வேட்கை நிறைவேறுகிற காரணத்தால்!

மேனன் வரவேற்பார்—பதவி தேடும் அவர் சோதரர்கள் சுக வாழ்வு பெறுவதற்கான வாய்ப்பு விரிவடைவதால்!

வடநாட்டு ஆதிபத்யக்காரர்களும் அதற்கு ஆதரவு நல்குவர்—தமிழ்நாடு தனித்திருந்தால் இந்தி மொழிச் சிங்காரியை சிற்றின்பக் கூடத்துக்கு அனுப்பி, நம் சிறார்களின் சிந்தையைக் கவர்ந்து கொள்ளும் வாய்ப்பு அதிகமாவதால்!

—எனவேதான் நாமும் எதிர்க்க வேண்டியவர்களாகிறோம்; தட்சிணப் பிரதேசம் தோன்றினால், தமிழ் ஆட்சி மொழியாக இருந்து ஆளமுடியாது—அது கன்னட, சேரளத் தோழர்களின் இதயத்தைக் குத்துவதாக அமையும்!

இந்தி நுழைந்துவிடும், தமிழரல்லாத தட்சிணப் பிரதேசத்தவரின் தன்மானத்தை உறிஞ்சிவிட்டு!

இத்தனைக் காரணங்களையும் காட்ட நாம் தட்சிணப் பிரதேசம் தகாது என்று கூறிடும் போதுதான் 'பேரிகை'யோசை யொன்று கேட்கிறது—ஆதரவாளர்களே,அணிவகுப்பில் சேருவீர், என்ற பரணியோடு!

"மலையாளமும், மைசூரும் தட்சிணப் பிரதேசமாக சென்னையுடன் சேர்ந்தால், திருவாங்கூரிலிருந்து வைகையாற்றுக்கு வற்றாமல் தண்ணீர் கிடைக்கும்; மைசூர் பாலாற்றிலே வெள்ளம் பெருக்கெடுக்கும்"—என்று காரணம் காட்டுகின்றனர், ஆதரவாளர்கள்.

இந்தியா ஒன்றாக இருக்கிறது; அசோக சக்கரத்தின் கீழே பாரதமாளுவதாகப் பறைசாற்றிக் கொள்கிறார்கள்; திருவாங்கூரிலும் மைசூரிலும் காங்கிரசே கோலோச்சுகிறது—அப்படி இருந்தும் அன்புரையாடி தண்ணீர் பெற முடியவில்லையாம்—வெட்கமில்லாமல் சொல்லிக் கொள்கிறார்கள், தட்சிணப் பிரதேசம் தோன்றினால்தான் நேசமும், பாசமும் பெருகி வழியும் என்று!

ஏன்; ஒரே மாநில அமைப்புக்கு வெளியே இருந்தால் அந்த அரசாங்கங்களுடன் நாம் நேசமாக இருக்க முடியாதா? தனியாக இருக்கும் ஆந்திரத்துடன் பேச்சு வார்த்தைகள் நடத்தித்தானே கிருஷ்ணா கோதாவரி ஆறுகளிலிருந்து தண்ணீர் பெறப் போகிறார் காமராசர்; 'ஆந்திராவிலும் காமராசர் வெற்றி' என்று உங்கள் பத்திரிகைகள்தானே கொட்டை எழுத்துக்களில் பிரசுரம் செய்கின்றன? அதைப் போலவே தமிழகம் தனி மாகாணமாக இருந்தால் மைசூரோடு மகிழ்ந்திருக்க முடியாதா? திருவாங்கூரிலிருந்து 'தீர்த்தம்' பெற முடியாதா?

—சிந்திக்க வேண்டும், மாகாணங்கள் ஒன்றுபட்டால் தமிழ்நாடு பயன் பெறும் என்று 'பராக்கு'க் கூறுவோர்!

பல ராஜ்யங்களாக இருப்பவற்றை இணைத்து ஒரே அமைப்பாக மாற்றி, ஏகாதிபத்ய வேட்டைக் காடாக ஆக்குவோர் இங்குமட்டுமல்ல; பாகிஸ்தானத்திலும் இருக்கின்றனர்!

பாகிஸ்தானை ஒரே உறுப்பாக மாற்றுவதை எதிர்த்து, எதிரியும் மயங்கும் அளவுக்குப் பிரச்சாரம் செய்த எல்லைப்புற காந்தியாம் கான் அப்துல் கபார்கான் சென்ற கிழமை கைது செய்யப்பட்டிருக்கிறார்.

பாக்கிஸ்தானத்திலே ஏகாதிபத்யப் பித்தர்களின் 'ஓர் உறுப்பு'த் திட்டத்துக்கும், இங்குள்ள வடநாட்டு எத்தர்களின் தட்சிணப் பிரதேச திட்டத்திற்கும் வித்யாசமேதும் இருப்பதாக அறிவுடையோர் இயம்பமாட்டார்கள்.

கபார்கான் கைதானார்—ஏக பாகிஸ்தான் கொள்கையை எதிர்த்து!

ஆந்திரா தட்சிணப் பிரதேசத்துக்குள் சேர்க்கப்படவில்லை—ஒரு பொட்டி சீராமுலுவின் பிணம் விழுந்த காரணத்தால்!

தட்சிணப் பிரதேசம் அமைப்போர் இந்த நிலைமைகளையும் சிறிது நோக்கவேண்டும்.

தமிழகம் தனித்து நிற்க ஆந்திரா காட்டிய வழிதான் தேவையென்றால் சீராமுலுகள் இங்கும் ஈசலெனத் தோன்றி, ஆட்சியாளரின் தான்தோன்றிப் போக்கிற்கு முடிவுகட்டத் தயங்கமாட்டார்கள்!

வடநாட்டு தட்சணைப் பிரதேசமாம் தட்சிணப் பிரதேசம் எந்த விதத்திலும் தோற்றுவிக்கப்பட்டே தீரும் என்ற வகையில் முயற்சிகள் நடைபெறுமானால், தமிழகத்தின் வீதிதோறும்—தமிழ் வழங்கும் இடங்கள் தோறும் 'கபார்கான்கள்' கிளர்ந்தெழுவார்கள் என்பதையும் நாம் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறோம்.

தட்சிணப் பிரதேசம் இன்னும் 'வதந்தி நிலை'யிலேயேதான் இருக்கிறது. தெளிவற்ற இந்த கட்டத்திலேயே தென்திசையில் இவ்வளவு எதிர்ப்பு இருக்குமேயானால், அந்த அமைப்பு முறை திணிக்கப்பட்டால் இந்த எதிர்ப்புணர்ச்சி எப்படியெப்படி உருவாகும் என்பதை டெல்லி பீடத்தவர் உணர வேண்டுகிறோம்.

★

★★★ புலியோ, கரடியோ என்று சந்தேகப்படுகிற அளவுக்கு போர்ச்சுகீசியர் மிருகவெறிச் செயலிலே ஈடுபட்டிருக்கின்றனர். அமைதி விரும்பிகள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர். நாடு கடத்தல்; ஜென்ம தண்டனை; சித்ரவதை—இவையெல்லாம் இன்று மட்டுமல்ல; வழி வழி வந்த போர்ச்சுகீசிய 'பண்பாடு'கள்! இதோ அந்த வரலாறு :

காட்டுமிராண்டிகளின் கதை!

இந்தியாவுக்கு வந்த வாஸ்கோட காமா என்ற முதல் போர்த்துகீசியனுக்கு, ஏது மறியா மக்களைச் சித்ரவதை செய்து சாக அடிப்பதில் தனி விருப்பம்!

டான் பிரான்ஸிஸ்கோ டி ஆல்மீடா என்பவனோ, தன் கையில் சிக்குவோரின் கண்களைப் பிடுங்கிக் களிப்பானும்!

மற்றொருவன்; ஆல்பான்ஸோ டி அல்புகர்க் என்பான், ...ன் கண்களில் தென்பட்ட ...ண்களின் மார்பகங்களையும் ...க்கையும் அறுத்து எறிவதி... மகிழ்ச்சியைக் காண்பா...ம்!

இந்தப் போர்ச்சுக்கீசிய புலி... "நாங்கள் மனிதர்களல்ல; ...ல் நெஞ்சு படைத்த காட்டுமி...ராண்டிகள்" என்பதை மெய்ப்...த்துக் காட்டியிருக்கிறார்கள், ...சிலிர்க்கும் பல்பல பயங்...ர நடவடிக்கைகள் மூலம். ...சரித்திரம் சித்தரிக்கும் அந்த ...ழிவுக் காதைகளில் சில:

★ 1501-ல் கோவாவுக்கு ...ருகிலே அஞ்சதிவ் என்ற ...த்தில், முஸ்லிம் யாத்திரிகர் ...ன் கப்பல் ஒன்று செல்வ...தைக் கண்டான், காமா. ...ந்த இரும்பு நெஞ்சத்திலே ...ரும்புத்தனம் அரும்பியது. ...ப்பலை மடக்கி மூழ்க அடித்து ...ட்டான். நூற்றுக் கணக்...கானவர்கள்—பெண்களும் குழந்...தைகளும் உட்பட நீரில் தத்த...ளித்து மூழ்கினார்கள்; அப...க்குரல் கொடுத்து செத்தார்...கள். தப்பித் தவறி பிழைக்க ...யற்சித்த சிசுக்களைக்கத்தியால் ...த்திக் கொல்லும்படியும், ...ஆண்களையும் பெண்களையும் ...டியால் தாக்கி நொறுக்கும்...படியும் ஆணையிட்டான். ...ரன் புகழ்பாடி புறப்பட்ட ...ந்த பக்த சிரோமணிகள் ...ல் மாகாவின் மடியிலேயே ...விழுந்து போனார்கள்!—...ந்த நெஞ்சுஉலுக்கும்நிகழ்ச்சி...யைத் தனது கப்பலின் தளத்தி...லிருந்து மேற்பார்வையிட்...டானும், கண்ணீரிலே களிப்...பைக் கண்ட அந்தக் காமா.

★★ இன்றுமொரு சம்பவம்—...ச்சிலே ஈரமற்ற காமாவின் ...ங்கார்யம்! கோழிக்கோடு ...கரைக்கு அருகிலே மீன் ...டிக்க படகில் சென்றுகொண்...டிருந்தார்கள் சில செம்படவர்...கள். கண்ணி வீசிய அவர்கள் ...மாவின் கண்களிலே சிக்கி...விட்டார்கள். மறுகணம் கடல் ...ரை சென்றோர்க்கும் கோர ...விளையாட்டு நடத்திவிட்டான் ...வன். அந்தச் செம்படவர் ...ளைப் பிடித்து, அங்கங்களைத் ...தனித்தனியாக வெட்டச் செய்...தான். 'ஐயோ' என்றழுதிய ...வர்களது மரணக்குரலிலே ...தனது சிரிப்பொலி மிதந்...து. துண்டாடிய அந்தச் சதைக் குவியலைப் படகிலேயே வைத்து கரைக்கு அனுப்பினான், வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கும் சுற்றத்தாரும் 'களிக்கட்டுமே' என்று!

கடலைத் தனது விளையாட்டுக்கூடமாக்கி—பிழைக்க வழி தேடிப் புறப்பட்டோரை கனல் விழிகளால் நோக்கி—அவர்களின் உயிர் போக்கி உவகை பெற்ற மற்றொருவன்—'கடற் பேய்'களின் பட்டியலிலே இரண்டாவது இடம் பெறுபவனும் டான் பிரான்ஸிஸ்கோ டி ஆல்மீடா என்பானும் காமாவுக்கு சளைத்திருக்கவில்லை.

★ 1507-ல் பம்பாயிக்கு அருகில் ஏழு முஸ்லிம் கப்பல்கள் இரத்த வெறிபிடித்த அவனது கொள்ளிக் கண்களில் சிக்கி விட்டன. அவ்வளவுதான்; கொலை வெறி கொண்ட அவனது மிருகப்படை அத்தனைக் கப்பல்களையும் சூறையாடி, பிரயாணிகள் அனைவரையும் கொன்றுக் குவித்தது.

★★ 'விளையாட்டில்' மற்றொரு ரகம், இதோ: கண்ணனூருக்கு அருகிலே மிதந்து சென்ற கப்பல் ஒன்றில் இருந்த பிரயாணிகள் அனைவரையும் வதைத்து, பாய்மரச் சீலை ஒன்றில் சேர்த்து தைத்து, கடல் மீன்களுக்கு இரையாக்கி விட்டான்.

★★★ மற்றும் கடற்கரை ஓரமாக உலாவிய போது அகப்பட்டவர்கள் அனைவரையும் பிடித்து உயிரோடு கொளுத்தினான். இந்த அழிவுச் செயல்களுக்கு மகுடம் சூட்ட வேண்டாமா? ஆகவே, தனது அத்தகைய இழிச் செயல்களுக்கு வெற்றி விழாவும் கொண்டாடினான் 1509-ல், டையு நகரில்!

'முஸ்லிம்களின் ஊரையோ—உறைவிடங்களையோ கண்டால் நான் சும்மாயிருக்கமாட்டேன்—சூறையாடாமல் விடமாட்டேன். அவர்கள் உயிரோடு என்னிடம் சிக்கினால் நெருப்பில் போட்டு பொரித்து விடுவேன்" — இப்படி கோரம் கொழிக்கும் கடிதம் ஒன்றை தனது பிறந்த நாட்டு (போர்த்துகீசிய) மன்னனுக்கு எழுதினான் ஆல்பான்சோ டி அல்புகர்க். எழுத்துக்களை செயலாக்கவும் அவன் தயங்கினான் இல்லை.

★ 1510-ம் ஆண்டிலே அவன் குருதி வெள்ளத்தின் 'உற்பத்தி ஸ்தான'மாக இருந்திருக்கிறான். இன்று துப்பாக்கி வேட்டுகள் அதிரும் கோவாவின் தெருக்களிலே, மூன்று நாட்கள் இரத்த ஆற்றை ஓட்டிக் காட்டியிருக்கிறான் அவன். துருப்புகளின் துணைகொண்டு, நகர மக்களைக்கொன்று குவித்தான்.

★★ மன்னனுக்கு கடிதம் எழுதினானே, அந்த மகத்தான சாதனையையும் அவன் செய்யத் தவறவில்லை. கண்களில் தென்பட்ட முஸ்லிம்களையெல்லாம் மந்தையைப் போல் ஓட்டி வந்து, அடிக்காமல் வதைக்காமல் மசூதி ஒன்றில் அடைத்தான்; பின், மசூதிக்கே தீயிட்டான்.

★★★ அந்தப் 'பலிவாங்கும்' பரம்பரையிலே வந்தோர் இவர்கள் மட்டுமல்ல; முந்தையரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, சிந்தைக் கலக்கும் சீரழிவுச் செயல்கள் புரிந்தோர் மிகப்பலர்! தீயிலே—கத்திமுனையிலே—கொடூரத்தின் உச்சியிலே தவழ்ந்து வளர்ந்த அந்த போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியக் குழந்தைதான், இன்று உதிரத்தில் ஊறிப் போன மூர்க்கத்தனத்தை இழக்க மார்க்கமின்றி, அழிவுப் பாதையிலே வேக நடைபோடுகிறது!

—('பிளிட்ஸ்'-13—8—55)

ஊசலாடும் உள்ளத்தினர்!

நிலைமை:

கோவா எல்லையிலே கொடியுடன் சத்யாக்கிரகம் செய்ய 'கோவாவில் வசிக்காத இந்தியர்கள்' முயற்சி எடுத்துக்கொண்ட நேரம்.

"கோவா எல்லையிலே இந்தியர்கள் சத்யாக்கிரகமா? அய்யோ, அய்யோ! கோவா விடுதலைபெற நாம் ஏன் சத்யாக்கிரகம் செய்ய வேண்டும்? அந்தப் புண்ணிய காரியத்தை கோவாக்காரர்களே துவக்கி வைக்கட்டும். விடுதலைக் கனல் கோவாவுக்குள்ளேயே கிளம்பி போர்ச்சுகீசியர்களுக்கு வேட்டு வைக்க வேண்டும்—அதைத்தான் நான் விரும்புகிறேன்."—நேரு.

★

நிலைமை:

இந்தியப் பிரதமர் நேருவின் இந்த விளக்கத்திற்குப் பிறகு, கோவாக்குள்ளே எதிர்பார்த்த வகையில் கிளர்ச்சி அரும்பவில்லை. பிறகு...

"கோவாக்காரர்கள் போர்ச்சுகீசியர் ஆட்சியை விரும்பினால்கூட நாங்கள் அவர்களை அங்கே அனுமதிக்கமாட்டோம் எப்படியும் அவர்கள் கோவாவைக் காலி செய்யத்தான் வேண்டும்."

—அதே நேருதான் இதையும் குறிப்பிட்டார். மாற்றம் கண்டு மனம் கூசவில்லை; மாஸ்கோ சென்றதின் மகிமையோ, என்னவோ!

★ ★ ★

"கோவா சத்யாக்கிரகத்தில் காங்கிரஸ் கட்சி அதிகாரப்பூர்வமாகக் கலந்து கொள்ளாது. ஆனால் தனிப்பட்ட காங்கிரஸ்காரர்கள் விரும்பினால் சத்யாக்கிரகத்தில் பூரண பங்கு பெறலாம்"

—காங்கிரஸ் கட்சி தீர்மானம்! பிறகு?

"இந்த நேரத்தில் சத்யாக்கிரகம் தேவையே இல்லை. காங்கிரஸ்காரர்கள் இதில் கலந்து கொள்ளக்கூடாது!"

—இது காங்கிரஸ் கட்சி சமீபத்தில் நிறைவேற்றிய தீர்மானம்—கோவாவிலே தியாகம் தேவைப்பட்ட நேரத்தில்! இதற்கும் காங்கிரஸ் கட்சி வெட்கப்படவில்லை!

சக்கரவர்த்தியின் திருமகன்

மூக்காஜி

வாலியின் மார்பில் குத்தி நின்ற பாணத்தை நீலன் மெள்ள அகற்றினான். உடனே காயத்திலிருந்து மலையருவி போல ரத்தம் பொங்கி, வாலியின் உயிர் உடலை விட்டுப் பிரிந்தது. அவன் மனைவி தாரை, 'அய்யோ!' என அலறி அழுதாள். "அங்கதா! உன் தகப்பனைக் கடைசித் தடவையாக வணங்குவாய்!" என்றாள். "உங்களுடைய பிரிய மகன் வணங்கி நிற்கிறானே! அவனுக்கு ஒன்றும் சொல்லமாட்டீர்களா? நான் விதவையானேன். மகனும் திக்கற்றுப் போனான்!" என்று இதயம் உடைந்த தாரை பிரலாபித்தாள்.

★ "காரியமாகும் வரையில் காலைப் பிடி!" ★

வாலியின் உடல் மலையெனச் சாய்ந்து கிடந்தது. இந்த நேரத்தில் சுக்ரீவனும் கலங்குகிறான். அவன் கலக்கத்தை ஆச்சாரியார் வர்ணிக்கிறார்; பாருங்கள்.

> "எனக்குள் மறைந்து நின்று உள்ளே வேலை செய்து வந்த ஆசை என் புத்தியைக் கெடுத்துவிட்டபடியால் அல்லவோ நன்றாக ஆலோசியாமல், வாலி புகுந்த குகையின் வாயிலை மூடிவிட்டு அண்ணனுடைய சம்பத்தை அபகரித்துக் கொண்டு ஆனந்தமாக அனுபவித்தேன்" என்று தனக்குள் சிந்திக்கலானான்.
>
> (27—3—55—'கல்கி')

இதிலிருந்து விளங்குவது என்ன? சுக்ரீவன் ஆசையின் காரணமாக புத்தி தடுமாறி வாலியை ஒழித்துவிட குகையை மூடினான் என்பதுதான் உண்மையாயிருக்க வேண்டுமென்று சென்ற இதழில் நாம் குறிப்பிட்டது சரியாகத் தோன்றுகிறதா — இல்லையா? இத்தகைய இழிகுணம் படைத்த சுக்ரீவனுக்குத்தான் துணையாக நின்றான் இராமச்சந்திர மூர்த்தி என்பதை எண்ணும்போது அவன்பால் எப்படித்தான் பக்தி பிறக்கிறதோ, பஜனைப் பித்தர்களுக்கு—நாமறியோம்.

✶

வாலி சாவுக்குப் பிறகு மழைகாலம் ஆரம்பமாகி விட்டது. அதனால் சீதையைத் தேடும் முயற்சியை ஒத்திவைத்துவிட்டு, ராம லக்ஷ்மணர் பக்கத்திலிருந்த ஒரு மலைக் குகையில் காலங் கழித்தார்கள். சுக்ரீவன் முதலியோர் கிஷ்கிந்தா புரத்தில் சுகமாக காலங் கழித்தார்கள். அதுவும் எப்படி? ராஜ காரியங்களையெல்லாம் மந்திரிகளிடம் ஒப்புவித்துவிட்டு, சுக்ரீவன் அந்தப்புர போகத்தில் மூழ்கிக் கிடந்தான் என்று ஆச்சாரியாரே எழுதுகிறார், 3—4—55-ம் நாள் இதழில்!

மழைகாலமும் முடிந்துவிட்டது. சுக்ரீவன் சொன்னபடி சீதையைத் தேடும் முயற்சி ஆரம்பமாகவில்லை. ராமனுக்கு அதனால் கோபம் பொங்குகிறது. அந்தக் கோபத்திலே உதிரும் வார்த்தைகளை ஆச்சாரியார் பொறுக்கித் தருகிறார்; படியுங்கள்!

> "உலகமெல்லாம் சௌந்தர்யமும் மகிழ்ச்சியுமாக இருக்கிறது. சீதை எங்கேயோ தவித்துக் கொண்டிருக்கிறாள். நானோ, இங்கே—நன்றி மறந்த வானர ராஜனுடைய தயவை எதிர்பார்த்துக் கொண்டு சும்மா கிடக்கிறேன். இந்த வானர ராஜனோ மதுபானத்தில் மூழ்கி, பெண்களோடு கூடி கிராம்மிய சுகத்தில் ஈடுபட்டு எனக்குத் தந்த வாக்கை முற்றிலும் மறந்துவிட்டான். இந்த வானர ராஜன் ஒரு கயவனாகத் தோன்றுகிறான்."
>
> [3-4-55 'கல்கி']

ராமனுடைய நண்பன் சுக்ரீவன் எத்தகையவன் என்பதை ராமனே விளக்குகிறான் மேற்கண்டவாறு! ராமன் கோபிப்பான் எனக் கண்ட அனுமான், சுக்ரீவனை எச்சரித்து அவனை சீதையைத் தேட அழைக்கிறான். இதற்குள் ராமனுடைய உத்திரவுப்படி லக்ஷ்மணன் கோபாவேசமாகப் பிரவேசிக்கிறான். "உன் அண்ணனை அனுப்பிய இடத்திற்கு உன்னையும் அனுப்புவேன்—என்று சொன்னதாகச் சொல்" என்றல்லவா ராமன் லக்ஷ்மணனிடம் கூறி அனுப்பியிருக்கிறான்!

ஆகவே லக்ஷ்மணன் ஆயுதபாணியாக ஆகரோஷத்துடன் புறப்பட்டுவிட்டான். லக்ஷ்மணன் வரும் செய்தியை சுக்ரீவனிடம் வானரர் கூறி நடுங்கினார்கள். வானர ராஜனோ, கள்ளும் ஸ்த்ரீகளுமாக அந்தப்புரத்தில் மயங்கிக் கிடந்தான். வானரர் சொன்னது அவன் காதில் ஏறவில்லை என்கிறார் ஆச்சாரியார். சுக்ரீவனின் அலட்சியம் லக்ஷ்மணனைப் புயலாக மாற்றுகிறது வில்லின் நாணை யிழுத்து ஒலி எழுப்புகிறான். ஒலி முழக்கம் கேட்டு சுக்ரீவன் நடுங்கி, தாரையை லக்ஷ்மணனிடம் சமாதானம் பேச அனுப்புகிறான்.

தாரையின் பேச்சைக்கேட்டு லக்ஷ்மணனும் சமாதானமடைகிறான். சமாதானம் பேசவரும் தாரையைப் பற்றி ஆச்சாரியார் கூறுவதைக் கேளுங்கள்:

> "அழகிலும், உலக விஷயங்களைப்பற்றிய சாமர்த்தியத்திலும், பேச்சு நயத்திலும் அவளுக்குச் சமானம் யாருமில்லை. அவள் லக்ஷ்மணனைச் சமாதானப் படுத்துகிறாள்"
>
> [3—4—55 'கல்கி']

போருக்கு வருகிறவனை சமாதானப் படுத்தவேண்டிய ஒரு பெண்ணுக்கு மேற்கூறிய திறமைகளோடு, அழகும் தேவையென்று ஆச்சாரியார் கருதுகிறார் போலும்!

அதனால்தான் தாரையின் அழகுக்கு முக்கியத்துவம் தரவேண்டிய நிலைமைக்கு அவர் ஆளாகிறார். சமாதானமடைந்த லக்ஷ்மணன் சுக்ரீவனோடு அளவளாவுகிறான். தங்கள் காரியம் நடக்கவேண்டுமென்பதற்காக ஆரியர்கள் எதையும் செய்வார்கள்—எதையும் பேசுவார்கள் என்பதற்கு இதோ ஒரு எடுத்துக்காட்டு!

சுக்ரீவன் சீதையைத் தேடாமல், சிருங்கார போகத்தில் ஆழ்ந்து கிடக்கிறான் எனக் கேள்விப்பட்ட ராமன், அவனை ஒரு நன்றிகெட்டகயவன்என்று தூற்றுகிறான் — லக்ஷ்மணனோ போருக்குப் புறப்படுகிறான் சுக்ரீவனோடு! சுக்ரீவன், சீதையைத் தேட புறப்பட்டதும், லக்ஷ்மணன் என்ன பேசுகிறான் தெரியுமா, சுக்ரீவனைப் பற்றி?

> "சுக்ரீவா! உன்னைப் போன்ற தீரன் ராமனைத் தவிர வேறு யாருமில்லை. நீ சபைமுகம் வந்து ராமனைக் கண்டு அவன் துயர் தணிக்கும் வார்த்தைகளைச் சொல்வாயாக!" என்றான்.
>
> [3—4—55 'கல்கி']

சுக்ரீவன் வந்ததும் ராமன் என்ன சொல்லுகிறான் தெரியுமா?

> "உன்னைப் போன்ற நண்பன் உலகில் வேறொருவனில்லை. உன் நட்பை நான் சம்பாதித்தது என் பாக்கியம்"
>
> [3—4—55 'கல்கி']

என்று வர்ணிக்கிறான் சுக்ரீவனைப் பற்றி!

இதிலிருந்து, தங்கள் காரிய சாதனைக்காக கயவர்களின் காலைப் பிடிக்கவும் தயாராக இருந்தார்கள் சக்ரவர்த்தியின் திருமகன்கள் என்பது தெளிவாகிறது. அதனால்தான் சகோதரத் துரோகியும், கயவனும், நன்றிகெட்டவனுமான சுக்ரீவனிடத்திலே ராம லக்ஷ்மணர் தோழமை பூண்டொழுகியிருக்கிறார்கள் என்பதும் புலனாகிறது.

(தொடரும்)

எல்லோரையும் அழைத்தாராம்!

"தட்சிணப் பிரதேச அமைப்பு எதிர்ப்புக்காக நடைபெறும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு நண்பர் ம. பொ. சி. அவர்களை 'போன்' மூலம் அழைத்தேன். அதற்கு அவர் மகிழ்ச்சி தெரிவித்ததோடு, பிறிதொரு சமயம் முடியுமானால் கலந்து கொள்வதாகக் கூறிவிட்டார்."

"கம்யூனிஸ்டு சட்சியையும் 'போன்' மூலம் அழைத்தேன். கட்சியின் ஜனநாயக பூர்வமான கமிட்டியைக் கலக்காமல் திடீரென முடிவுகூற முடியாதெனக் கூறியதோடு, தட்சிணப் பிரதேச அமைப்பு பற்றி ஜனசக்தியில் எழுதியிருப்பதாகவும் தெரிவித்து, அடுத்துவரும் கூட்டங்களில் கலந்து கொள்ள முயற்சிப்பதாக 'போன்' மூலமும், கடித மூலமும் அறிவித்திருக்கிறார்கள்."

"காங்கிரஸ்காரர்களையும் அழைத்தேன், 'போன்' மூலம்! அவர்கள் மேலிடத்தைக் கலந்துதான் முடிவுகூற வேண்டுமென்று மழுப்பி விட்டார்கள்."

"ஆகவே, எல்லோரையும் கூப்பிட்டுப் பார்த்து விட்டேதான் இன்று இந்தக் கூட்டத்தை நடத்துகிறோம். இது என்ன எங்கள் வீட்டுக் கல்யாணமா; எல்லோரையும் கூப்பிட?"

—சென்னை, கடற்கரைக் கூட்டத்தில் எஸ். குருசாமி-18-9-55.

புதையல்

மு. கருணாநிதி

சென்ற இதழில்....

★★ மலையாள பகவதிக்கும் தெரியாமல், மேனகா துரையிடம் தன் எண்ணத்தை வெளியிட முயலுகிறாள். துரை மேனகாவின் இஷ்டத்துக்கு இணங்க மறுக்கிறான். இந்த நிலையில் மலையாள பகவதி குறுக்கிட்டு, மேனகா ஆசையை நிறைவேற்றுமாறு துரையிடம் தூண்டிவிடுகிறான். பயனில்லை. பகவதியின் கருத்துப்படி அன்றிரவு புதையல் தோண்ட வரும் கிழவன் யார் என்று கண்டுபிடித்துவிடும் நோக்கத்துடன் அம்பலம் புறப்படுகிறார்...

41

புதையல்!

சூரியன் தனது கடமையை முடித்துவிட்டு களைப்பாறுவதற்கு மேற்றிசையில் மறைந்து விட்டான் என்று கூறமுடியாது—சுற்றிக் கொண்டிருக்கும் உலகத்தின் ஒரு பகுதி சூரியனுடைய பார்வையைவிட்டு வேறு பக்கம் திரும்பிக் கொண்டது. அதனால் இருள் வந்தது.

அந்தப் பகுதியிலே ஒரு அணு தான் மருங்கப்பள்ளம். இருள் மூடிக் கிடக்கும் அந்தச் சிற்றூரில் மக்கள் நடமாட்டம் வழக்கம் போல குறைந்து விட்டது. சிவன் கோயிலின் எதிரிலே அமைந்துள்ள ஏரி போன்ற அந்தத் தாமரைக் குளம், தனது எழிலை யாருக்கும் காட்ட முடியாமல் தவித்துக் கொண்டிருந்தது. வானத்து விளக்கும் இன்னும் ஏற்றப்படவில்லை. அப்படி ஏற்றப் பட்டாலும் அதை மறைப்பதற்காகவே கங்கணம் கட்டிக் கொண்டு மேகங்கள் எல்லாம் அணிவகுத்து நின்றன. தாமரைக் குளத்திலே குதித்துக் கிளம்பி மீண்டும் தண்ணீரில் விழும் கெண்டை மீன்கள் உண்டாக்கும் ஓசையையும், தவளைகளின் 'கீதத்'தையும் தாமரைக் குளத்தை நோக்கி நிற்கும் சிவன் கோயிலின் குள்ளக் கோபுரத்துப் பொந்துகளிலே குடுகுடு வென்று ஒலியெழுப்பி காதல் புரியும் புறாக்களின் சப்தத்தையும் தவிர, வேறு எதையும் கேட்க முடியவில்லை.

கோயிலுக்கு எதிரேயுள்ள தெருவின் பக்கமாக ஒரு மனிதன் நடந்து வருவது தெரிந்தது. அந்த மனிதன் வேறு யாருமல்ல; மாயாண்டிக் கிழவரேதான்! கோயிலை நோக்கி வேகமாக நடந்து வந்தார். அவரது கையிலே ஒரு மண்வெட்டி இருந்தது.

குளத்துப் படித் துறையிலே இறங்கி முகம் கைகால்களை கழுவிக்கொண்டார். கோயிலுக்கு எதிரேயுள்ள திண்ணை போன்ற மேடையில் அமர்ந்து சுற்று முற்றும் பார்த்தார். பின்னர், இருண்ட ஆகாயத்தை நோக்கியபடி சிந்தனையில் ஆழ்ந்தார். அவரது முகத்திலே கலக்கமும், எதையோ எதிர்பார்க்கும் ஆவலும் நிரம்பியிருந்ததை கோயில் வாசலில் 'மினுக் மினுக்' கென்று எரிந்து கொண்டிருந்த விளக்கு ஒன்று விளம்பரப் படுத்திக் கொண்டிருந்தது.

சிந்தனையில் ஆழ்ந்திருந்த அவரது கவனத்தை அந்த இருட்டில் திடீரென்று கிளம்பிய ஒரு இருமல் சப்தம் கவர்ந்தது. சுற்றுமுற்றும் பார்த்தார். அங்குமிங்கும் நடந்தார். யாரும் தென்படவில்லை. அவரது ஒவ்வொரு அசைவையும் கவனித்துக் கொண்டு சுமார் முப்பது ஆட்களும், வெள்ளியம்பலமும் கோபுரத்து மேலே உட்கார்ந்திருந்தார்கள். அவர்களிலே ஒருவன்தான் திடீரென்று இருமி விட்டு, வெள்ளியம்பலத்தின் முரட்டுக் கையால் தன் தலையை வீங்க வைத்துக் கொண்டான்.

மாயாண்டி, குளக்கரைப் பக்கமாக நடந்தார். கோபுரத்தை அண்ணாந்து பார்க்காமல், வேறு பக்கம் பார்ப்பதுபோலப் பார்த்தார்.

வெள்ளியம்பலமும் ஆட்களும் அசையாமல் மூச்சைப் பிடித்துக் கொண்டு கோபுரத்துப் பொம்மைகள்போல நின்றார்கள். மாயாண்டி மீண்டும் கோயில் வாசல் பக்கமாக வந்து உள்ளே நுழைந்தார். மூலவிக்கிரகத்திற்கு எதிரேயுள்ள நந்தி மண்டபத்தினருகே வந்து நின்றார். அங்கிருந்து கீழ்மூலையில் உள்ள சனீஸ்வரன் மண்டபத்தை உற்று நோக்கினார். உரக்கப் பாட ஆரம்பித்தார்.

''எழுவானுக்கும் தொழுவானுக்கும் இடையிலே—காக்கை மூக்குநிழலிலே-கள்வர் புகும் வழியிலே-கண்டாலும் 'கம்மாளர்' கண்ணிலே...!''

–இந்தப் பாட்டை வெகு உருக்கமாகப் பாடினார். சனீஸ்வரன் அமர்ந்திருக்கும் காக்கை வாகனத்தை ஒருமுறை பார்த்தார். அதற்குள் அம்பலமும், அவரது ஆட்களும் கோபுரத்தின் வேறு பக்கத்திற்குவந்து மாயாண்டியின் செய்கைகளை கூர்மையாக கவனிக்கத் தொடங்கினார்கள். மாயாண்டி, தன்னிடமுள்ள மண்வெட்டியால் நந்தி மண்டபத்திற்கு முன்பாக மண்ணைத் தோண்ட ஆரம்பித்தார்.

அம்பலம், ஆர்வத்தோடு அதைப் பார்த்துக்கொண்டேயிருந்தார். மாயாண்டி வெட்டிக் கொண்டேயிருந்தார். ''எழுவானுக்கும் தொழுவானுக்கும்......'' என்ற பாடலை அவர் வாய் முணுமுணுத்துக் கொண்டேயிருந்தது! ஆழமான குழி தோண்டப் பட்டுவிட்டது.

மாயாண்டி, தன் மடியிலேயிருந்து ஒரு செப்புத் தகட்டை எடுத்தார். அதை அந்தக் குழியின் ஓரத்தில் வைத்தார். ஆவேசம் வந்தவர்போல 'எழுவான் தொழுவான்' பாட்டை உச்சரித்துக் கொண்டு குதித்தாட ஆரம்பித்தார். மீண்டும் மண்வெட்டியை ஓங்கினார். ஆக்ரோஷமாக பூமியைத் தோண்டினார். ''டங்'' என்று ஒரு சப்தம்! ''ஆகா! கண்டேன்-கண்டேன்!'' என்று மண்வெட்டியைக் கீழே போட்டுவிட்டு கையினாலேயே மண்ணைத் தள்ள ஆரம்பித்தார். ஒரு சிறு தவலை போன்ற பாத்திரம்—அதை எடுத்தார். குப்புறக் கொட்டினார்.

மேலே கோபுரத்திலிருந்த அம்பலம் அதை மிக ஆவலோடு பார்த்தார். தவலையிலிருந்து எதுவும் கீழே விழவில்லை என்பதைக் கண்ட மாயாண்டி, தீக்குச்சியின் உதவியால் தவலையைப் பரிசோதித்தார். அதற்குள்ளே சுருட்டப்பட்ட ஒரு தகடு இருந்தது. அதை பரபரப்போடு எடுத்துப்படித்தார். மீண்டும் தீக்குச்சியின் உதவியால் தகட்டை உற்று நோக்கினார். ''ஆகா! அப்படியா சங்கதி? நான் அதிர்ஷ்டக்காரன்! ஜெயம்! ஜெயம்!!'' என்று கூவினார்.

சிரிக்குதடா நல்லழகு!

— கி. மனோகரன் —

காதல் கதைபேசும் காரிகையர் கண்ணொளியில்,
கட்டவிழு, மூடலிலே கடுகிவரும் சினவுரையில்,
சாதல் தவிர்ந்ததோரு காதல் பெருவெளியில்
கைப்பிடித்த தம்பதிகள முதலிரவின் சந்திப்பில்,
காதல் தேவியவள் கனகமுகத் தரும்பியெழும்
பெருவியர்வைத் தாரகையில்,நாணத்தில், கண்புதைப்பில்
மோதச் சிரிக்குதடா, நல்லழகு, முல்லையவள்
மோகனநற் புன்சிரிப்பில் பூத்துக் குலுங்குதுகாண்!

பாராண்ட பைந்தமிழன், பாய்ந்த பகை நேரடுத்துப்
பாறயெறிந் தெற்றுதற்குப் படைநடத்தும் காட்சியினில்,
சீர்மாண்ட சிரம்தாழ்த்திக் கூர்வாளை நிலமாழ்த்திச்
செருமுனையில் பகைப்புலத்தோர் தாள்பற்ற, அறம் வழுவா
தார்பூண்ட தமிழேறு, நிணநாற்ற வாள்காட்டித்
தகவற்றோய் ''ஓடிப்போ'' எனக்காட்டும் விழிவழியில்
கார்காண்ட மயிலாடும் காட்சிதனைத் தான்மிஞ்சக்
கவினுடும், புவிமகிழப் பேரழகு சிரிக்குதுகாண்!

தத்துப் பித்தெனவே நடைபோடும் சிறுமழலைத்
தளர் நடையில்; தரணிமகிழ்ப் பொக்கைவாய்ச் சிரிப்பில்
சித்தம் குளிரவொரு சிற்றிலிழைத்து, சிறு
சோறு குழைத்து தவழன்பு விளையாட்டில்
பித்த நிலைக் குன்றினுச்சி தனிவிலகை
பட்டென்றேற்றி வளர்மழலை மொழி நறவில்
நத்திக் கொழிக்குதடா, நல்லழகு, நானிலத்தை
நாட்டியப் பேரரங்காக்கி, அழகரசி ஆடுகின்றாள்!

தோண்டிய குழியை மீண்டும் மண்ணைப் போட்டு மூடிவிட்டு, தவலை, தகடுகள், மண்வெட்டி, ஆகியவைகளுடன் கோயிலைவிட்டு அவசரமாக வெளியேறினார்.

அம்பலம் கோஷ்டியினர் கோபுரத்திலிருந்து இறங்கினார்கள். கிழவரைத் தொடர்ந்தார்கள். கிழவர், தன் பின்னால் யாராவது வருகிறார்களா என்று ஜாடையாகத் திரும்பிப் பார்த்துவிட்டு, கோயிலின் பின்புறமாக நடந்தார். அங்கே ஒரு தேவதையின் சிலை—பயங்கரமான உருவம் — மாடம் போன்ற அமைப்புள்ள மண்டபம் —எதிரிலே ஒரு மாமரம்! அந்த மாமரத்தடிக்கு மாயாண்டி சென்றார்.

''தங்கம் புதைக்கப்பட்ட இடம் இதுதான்! எழுபது கோடி பசும் பொன்னுக்கு இங்கே தான் ஆதாரம் இருக்கிறது! மறைந்து கிடக்கும் பொன் மணியே! இந்த ஏழை மனிதனை வாழ்விக்க வந்த வழிகாட்டியே! உன்னைக் காண வேண்டிய காலம் வந்துவிட்டது! என் வாழ்வில் களிப்பு வந்துவிட்டது— இனி கவலை தொலைந்தது'' என்று பூமியைப் பார்த்து கூத்தாடினார். கோயிலுக்குள்ளே எடுத்த தகட்டை கையிலே வைத்துக் கொண்டு, தீக்குச்சியின் உதவியோடு, ஏதேதோ திசைகளைக் குறித்துக் கொண்டார். தன்கால்களால் தரையை அளந்தார்.

கிழக்கிலே பத்து அடி—வடக்கிலே பத்து அடி அளந்து கொண்டார். மண்வெட்டியைத் தூக்கி வீராவேசமாக, வெற்றிச் சிரிப்போடு பூமியை நோக்கி ஓங்கினார். ஓங்கிய மண்வெட்டி பூமியில் விழுவதற்குள் வெள்ளியம்பலம் ஓடிவந்து மாயாண்டியைப் பிடித்துக் கொண்டார். அம்பலத்தின் ஆட்கள், மாயாண்டியைச் சூழ்ந்து கொண்டார்கள். மாயாண்டி திகைத்து நின்றுவிட்டார்.

''ஆகா! என்ன இது? நான் ஒரு பயங்கரமான கனவு காண்கிறேனா? நான் இப்போது எங்கே

அடுத்த ஒலியில்

மு. க. எழுதும்

ஆரூர் மும்மணிகள்!

இருக்கிறேன்? சொப்பன லோகத்தில்தானா? வேறெங்கே இவ்வளவு பெரிய கொடுமையான வேதனைக்கு ஆளாக முடியும்? அய்யோ! தூக்கத்திலிருந்து நான் விழித்துக் கொள்ள மாட்டேனா?'' என்று கத்தினார் மாயாண்டி.

''என்ன உளருகிறாய்—கிழவா! எங்கே வந்தாய்? என்ன வேலை செய்கிறாய்?'' என்று அதட்டினார் அம்பலம்.

''நான் எங்கே வந்தால் யாருக்கென்ன? நான் ஒரு பைத்தியக்காரன்! நான் எங்கேயும் வருவேன்!''

''பைத்தியக்காரனுக்கு கோயிலிலே என்ன வேலை?''

''பைத்தியக்காரனுக்கு வேறு எங்கேதான் வேலை?''

''பைத்தியக்காரனுக்கு மண்வெட்டி எதற்காக? கையிலே இது என்ன தகடு?''

''அய்யோ, என்னை விட்டுவிடு—நான் போகிறேன்.''

''கிழவா! வீணே சாகாதே! நீ எங்கு வந்திருக்கிறாய்-என்ன செய்கிறாய் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். புதையல் எடுக்க வந்திருக்கிறாய்; உண்மைதானே?''

''என்ன—புதையலா?''

''ஆச்சரியப்படுகிறாயா? அடி வாங்கி சாகாதே—உண்மையைச் சொன்னால் உயிர் பிழைப்பாய்! இல்லை; அதோ அந்த தாமரைக் குளத்திலே உன் பிணம் மிதக்கும்! ஜாக்கிரதை!''

''அப்பாடா! அவ்வளவு பெரிய தண்டனையா? அம்பலம்; அப்படியெல்லாம் ஒன்றும் செய்துவிடாதே! இன்னும் ஒரு முப்பது நாற்பது வருஷமாவது ஆனந்தமாக வாழ நான் ஆசைப்படுகிறேன்.''

''அப்படியானால் சுக்கு உண்மையை! புதையல் எடுக்கத் தானே வந்தாய்?''

''ஆமாம்!''

''கொடு இப்படி அந்தத் தகட்டை!''

மாயாண்டி, தன் கையிலுள்ள தகடுகளை அம்பலத்திடம் கொடுத்துவிட்டு நடுங்கியபடி பேச ஆரம்பித்தார்:

''அம்பலம்! கொஞ்சப் பொருளல்ல; எழுபது கோடி பசும் பொன் இருக்கிறது! முழுவதும் வைத்து என்னாலும் நிர்வகிக்க முடியாது. நாம், ஆளுக்குப் பாதி எடுத்துக்கொள்வோம். எனக்கு நீ உயிரும், பாதிப் பொன்னும் கொடுத்தால் போதும். எல்லா ரகசியங்களையும் சொல்லிவிடுகிறேன். அந்தத் துரையென்று ஒரு பயல். அவன் எனக்குத் துணைக்கு வருகிறேன் என்றான். ஆள் போன இடமே தெரியவில்லை; அயோக்கிய இளைஞன்! இதோ, இந்தத் தகடு இருக்கிறதே; இதுதான் புதையலைக் கண்டுபிடிக்கும்முதல் வாயிற்படி! இதன் உதவியைக் கொண்டுதான் இந்த இரண்டாவது தகட்டை கோயிலுக்குள்ளே எடுத்தேன். இதில் கண்டுள்ள குறிப்பின்படி, இப்போது இந்த இடத்தைத் தோண்ட வேண்டும். இங்கே புதையல் கிடைத்தாலும் கிடைக்கலாம். அந்தத் தகடு நிச்சயமாக, எழுபது கோடி பசும் பொன்னை நமக்குக்காட்டிவிடும்''

''அப்படியா! இதோ, இங்கே வெட்டச் சொல்லுகிறேன்! டேய்; ஆரம்பமாகட்டும்'' என்று அம்பலம் ஆட்களுக்குக் கட்டளையிட்டார்.

ஆட்களின் அதிதீவிர சுறுசுறுப்பால் வெகு வேகமாக அந்த இடத்திலே பூமி குடையப்பட்டது. அம்பலமும், மாயாண்டியும் ஏதாவது சப்தம் வருகிறதா என்று கவனித்துக்கொண்டே நின்றனர்.

''டணார்'' என்று ஒரு பெரிய ஒலி கிளம்பிற்று. ஆட்கள் மண்ணை அள்ளி விட்டு குழிக்குள்ளேயிருந்து ஒரு பெரிய பெட்டியைத் தூக்கினார்கள். பழமையடைந்து போன ஒரு பித்தளைப் பெட்டி! அதை அம்பலம் திறந்தார். திறக்க முடியவில்லை. கோடரி ஒன்றினால் அதை உடைத்தார். அந்தப் பெட்டிக்குள்ளே இன்னொரு சிறிய பெட்டியிருந்தது. அதையும் திறந்தார். அதற்குள்ளே ஒரு தகடுச் சுருள் காணப்பட்டது. அதை அம்பலம் பிரித்தார். மாயாண்டி படித்தார்.

''இங்கிருந்து நூறு கெஜ தூரத்திலே வெட்டு—எழுபது கோடி பசும் பொன் கிட்டும்!'' என்று பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது. சிறிய எழுத்துக்களில், வெட்ட வேண்டிய இடத்திற்கான எல்லைக் குறிப்புகள் எழுதப்பட்டிருந்தன. திசையையும், அளவையும் காட்டுகிற கோடுகள் வரையப்பட்டிருந்தன.

''என்ன செய்யலாம்?'' என்று அம்பலம் கேட்டார்.

''இது இன்று இரவுக்குள் யோசித்து முடிவு செய்கிற விஷயமல்ல; நாளைக்கு முயற்சிப்போம்'' என்று மாயாண்டி பதில் கூறினார்.

''நீர் எங்கும் ஓடிவிட்டால்?'' என்று சந்தேகத்தோடு அம்பலம் கேட்டார்.

''எப்படி ஓடுவது? இந்தத் தகடுகளை எல்லாம் விட்டுவிட்டு ஓடுவேனா? அம்பலம் என்னை ஏமாற்றாமல் இருந்தால் அது போதும் ஆண்டவனே!'' என்று மாயாண்டி பெருமூச்சு விட்டார்.

''சரி, வீட்டுக்குப் போவோம்'' என்று அனைவரும் அதைவிட்டுப் புறப்பட்டார்கள்.

[வளரும்]

★ மகாபாரதம் - [துகில் உரியும் படலம்] - 18 ★

பாரதி பக்தர்களே; பழங்கதை வேண்டாம் !

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

'கம்பனைச் சுடு' என்று கூக்குரலிடும், பிற்போக்காளரின் புத்தி. .... "—இது அதே ..தியில் 'கம்பனைச் சுடு' ..ற புத்தக விமர்சனத்தின் ..தல் வாக்கியத் துவக்கம்!— ..ரே பக்கத்தில் ஒரே நபர் இப் ..டி திட்டியிருக்கிறார்.

(..சக்தி, 18-9-55, பக்கம்-10)

..னயுகம்!

மக்கள் இலக்கியம்!

மக்கள் கலை!

..னநாயகத் தன்மை!

எதார்த்தம்!

மனிதத்துவம்!

தேசிய, சர்வ தேசியத் தன்மை!

-இது கொ-மோ-ஜோ என் ..ம் சீனத்துச் சிந்தாமணி ..லக்கியத்துக்குத் தரும் இலட் .. இலக்கணம்!

இதையும் கூறிவிட்டு, கட் ..ரை ஆசிரியர் சுட்டிக்காட்டு ..றார், 'கம்பனைச் சுடு' என்று ..றுவது பிற்போக்காளரின் ..த்தி என்று!

★★★ பாரதி பாட்டுகளிலே தான் கொ-மோ-ஜோ கூறிய பண்பாடுகள் இருக்கின்றன; சரி! கம்பனின் பாட்டிலே என்ன இருக்கிறது? சண்டாள ராமனின் சரிதை ஜனயுகத்துக்குப் பொருந்தி வருமா? தவம் செய்த சூத்ர மனிதனின் தலையை வெட்டியெறிந்த செயல், மக்கள் இலக்கியமாகவோ, மக்கள் கலையாகவோ கருதப்பட நியாயமிருக்கிறதா? செருப்புக்கு நாடாளும் உரிமை தந்த வரலாற்றில் ஜனநாயகத் தன்மையா ஒட்டிக் கொண்டிருக்க முடியும்? பூர்ண கர்ப்பவதியை புலி வாழும் காட்டிற்குத் துரத்திய கற்பனையில் மனிதத்துவமா பொதிந்திருக்கிறது? எதிரியின் பட்டணமாம் 'இந்திர லோகம்' நிகர் இலங்காபுரியை எரித்துச் சாம்பலாக்கிய பிருகச் செயலில் எங்கே தோழரே 'சர்வதேசத் தன்மை' தெரிகிறது?

—இந்தக் கேள்விகளை மாஸ்கோவுக்குத் தெரிவிக்கா ..ல் ஒருமுறை அவருக்குள்ளாகவே எழுப்பிக் கொண்டிருப்பாரேயானால் தெளிவு கிடைத்திருக்கும். கம்பனைக் கையிலெ ..த்ததால்தென்னகத்தில் அவர் ..ன் கட்சிக்கு ஏற்பட்டிருக் ..ம் நாற்றத்தையும் ஓரளவுக்கு அகற்றியிருக்கலாம். ..வம்; செய்யத்தவறி ..ட்டார்கள்!

காலிலே மிதித்துக் கொண் ..தை, கையினுல் தொட்டு ..ன்னவென்று பார்க்க, அப்போதும் புலப்படாமல், மூக்கினுல் முகர—அது மூக்கிலே ஒட்டிக் கொண்ட பிறகு தான் அதை பன்றி உண்ணும் பதார்த்தமென்று புரிந்து கொண்ட கதையாக, என்னவோ ஏதோவென்று ஜீவாக்கள் கம்பராமாயணத்தை எடுத்து, இப்போது அது கசப்பது தெரிந்ததும் உள்ளுக்குள்ளாகவே புழுங்கிக் கொண்டிருக்கிறார்கள்—இது தெரிகிறது, நமக்கு! இருந்தாலும் மீசையில் மண் ஒட்டியதை அவ்வளவு துணிவுடனு ஒத்துக் கொள்வார்கள்?

எனவேதான் விமர்சன கர்த்தா இப்படி எழுதுகிறார்— "12-ம் நூற்றுண்டில் அன்று நிலவிய நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட ஒரு சிறு நூலை (இராம காதை சிறு நூலாம்!—ஒப்புகிறார்; நமது பாராட்டு!) இருபதாம் நூற்றுண்டில், 1955-ம் வருஷத்திய மனித நாகரீக வளர்ச்சி அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு கண்டன விமர்சனம் செய்வது பகுத்தறிவற்ற, இனவெறித் துவேஷம் நிறைந்த ஒரு செயல் என்பதை இந்நூலைப் படிக்கும் ஒவ்வொருவரும் மறுக்க முடியாது ஏற்கும்படி செய்கிறார்."

12-ம் நூற்றுண்டில் நிலவிய நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட நூலைக் கண்டிப்பது பகுத்தறிவு அற்ற, இனவெறித் துவேஷம் என்கிறார்!- இது 'விஞ்ஞான சாத்திர உண்மையை அடிப்படையாகக் கொண்டு' உராய்ந்து கண்டுபிடித்த உண்மை!

12-ம் நூற்றுண்டில் ஜார் பரம்பரை — அந்த நிழலிலே வளர்ந்த முதலாளித்வக் காளான் கூட்டம்—முழு நிலவு போல எதிர்ப்பு மேகங்கள் ஏதுமில்லாமல் ரஷ்யாவிலே பவனி வந்தது. குட்டினுல் குனிந்து கொடுத்தார்கள்; அதட்டினுல் அடங்கிக் கிடந்தார்கள்; 'ஜே' போட்டார்கள்; பல்லக்கு தூக்கினுர்கள்!

பணபலத்துக்குப் பணிய வேண்டும்—அந்த நூற்றுண்டின் 'நம்பிக்கை'!

ரஸ்புட்டின் ராஜரிஷி— அந்தக் காலத்து நம்பிக்கை தான், இது!

இந்த நம்பிக்கைகளை யெல்லாம் அடிப்படையாக வைத்து ரஷ்ய நாட்டுக் கம்பனெருவன் 'ஜார் அண்டு ரஸ்புட்டினுயினம்' பாடுகிறனென்று வைத்துக் கொள்ளுங்கள்.

முதலாளிக்கு வேலை செய்வதை மனித சமுதாயத்தின் முதற் கடன்; பணிய மறுத்தால் பரலோகக் கதவு திறக்க மறுக்கும்—இப்படியெல்லாம் அந்தக் கம்பன் கிறுக்கி வைத்திருக்கிறன்.

ஜனசக்தியார் அந்த ரஷ்ய ராமாயணத்துக்கு புகழுறை எழுதுவாரா ? முதலாளிக்கு மண்டியிடுபவனுக்குத்தான் தன் கட்சியில் முதலிடம் என்று முழங்குவாரா? ரஷ்யக் கம்பனின் கற்பனை உருவத்துக்குக் கட்டாணி முத்தங்கள் வழங்குவாரா?

நிச்சயம் இப்படியெல்லாம் செய்ய மாட்டார். ஏன்?

'12-ம் நூற்றுண்டில் அன்று நிலவிய நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட சிறு நூல்தானே' அது! அதை இருபதாம் நூற்றுண்டில், 1955-ம் வருஷத்திய மனித நாகரீக அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு கண்டன விமர்சனம் செய்வது 'பகுத்தறிவு அற்ற, இனவெறித் துவேஷம் நிறைந்த ஒரு செயல்' ஆயிற்றே—பின்னர் எப்படி அதை அவர் எதிர்க்கலாம்?

இவர் ஆதரித்தாலும், மாஸ்கோ அதை எரித்துச் சாம்பலாக்கி, அந்தச் சாம்பல் மேட்டிற்குப் பக்கத்தில் 'பிற்போக்கு இலக்கியத்தின் முன்னேடி; தொடாதே; அபாயம்'—என்றல்லவா 'போர்டு' மாட்டியிருக்கும்!

ஜனசக்தியாரே! 12-ம் நூற்றுண்டின் நம்பிக்கை என்னும் இருட்டில் இருபதாம் நூற்றுண்டின் சுழல் விளக்கைச் செலுத்தா விட்டால் நீங்கள் பேசும் பொதுவுடைமையைக் கண்டு பிடிக்கவே முடியாது நண்பரே! கேவலம் கம்பனைச் சாக்கு காட்டி உங்கள் அஸ்திவாரத்தை நீங்களே ஆட்டிக் கொள்வது ஆபாசம்; அறிவீனமும் கூட!

நீங்கள் கொண்டாடுவதாகச் சொல்கிறீர்களே, அந்த பாரதியே பாடியிருக்கிறன் :

"மறைவாக நமக்குள்ளே பழங்கதை
சொல்வதிலோர் மகிமை இல்லை," என்று!

ஜீவா எழுதுகிறார்,"(இப்படி) எடுத்துக் கூறி மாறுதல் வேண்டா நம் பண்டிதர்களின் மனத்துடிப்பை சுக்கு நூருக உடைத் தெறி"வதாக!

பாரதியின் பக்தரென சொல்லிக் கொள்வோரே! இராம காதை யெனும் பழங்கதையைப் புரட்டுவோரே ! பண்டிதரின் மனத் தடிப்பை விடவா உங்கள் மனம் அதிகமாகத் தடித்திருக்கிறது? பாரதி பாட்டுக்கு முகவுரை எழுதினுல் மட்டும் போதாது; உங்கள் முகத்திலுள்ள அழுக்கையும் துடைத் தெறியுங்கள்! ஃ

பிறைவானம்...

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

பூட்டு ! ஆமாம்; குடிசை பூட்டப்பட்டு விட்டது! "பாலா! சாயந்தரம் வீட்டுக்காரி வந்தாள். நீ வாடகை தருவேன் என்ருயாம். இதுவரை காத்திருந்தாள். கடைசியில் கோபம்வந்து, சாமான்களை எடுத்து வெளியே வீசினுள். பூட்டிக்கொண்டு, அதோ பார், போகிருள்" என்றுள் அம்மா!

பாலன் பார்த்தான். கிழவி போய்க் கொண்டிருந்தாள். 'ஏ, பாட்டி!' என்று கத்தினுன். பாட்டி திரும்பிப் பார்த்தாள். 'வா இங்கே! இதோ, உன் வாடகை!' என்றுன். கிழவி திரும்பி வந்தாள் வேக வேகமாக.

பாலனுக்கு ஒரே ஆத்திரம்! கால்சட்டைப் பைக்குள் கையை விட்டான் பணத்தை எடுக்க. மறு கணம்..."ஐயோ' என்று அலறினுன். பையிலே தேளா? பாம்பா? அப்படி புதியன எதுவுமில்லை; பழையதை-பணத்தைக்காணேம்! பாலன் என்ன செய்வான்? அவன் முகம் 'குப்'பென்று சிவந்தது. தலை குனிந்தான். மீண்டும் தலையை நிமிர்த்தினுன். ஆபாசமாக திட்டிக் கொண்டு பாட்டி போய்க்கொண்டிருந்தாள். எங்கே பணம்? பாலன் தேடவில்லை; தேட முயற்சிக்கவுமில்லை. ஆற்று வெள்ளம் அடித்துச் சென்ற பணத்தை எப்படித் தேட முடியும்?

★

சற்றுநேரத்தில் குடும்பம் புது வீடு புகுந்தது. புது வீடா? ஆமாம்; பக்கத்திலேயிருந்த இலுப்ப மர அடிவாரம்தான் மாளிகையாகி விட்டது அவர்களுக்கு! அதற்கு யாரும் வாடகை கேட்க முடியாது—அது 'சொந்த' வீடு!

பாலன் ஆற்றங்கரை மணமேட்டில் உட்கார்ந்திருந்தான். எதிரே சினிமா கொட்டகை......புதுப் படம்—ஒரே கூட்டம்—கூச்சல்! வண்ணச் சுவரொட்டிகள்— அதிலே அந்த அண்ணனும் தங்கையும்! பாலனுக்கு அழுகை வந்துவிட்டது. சடாரென்று தலையைத் திருப்பிக் கொண்டான். ஆற்றுக்கு எதிர்க்கரையில்...சுடுகாடு! தீ! பிணமாகிப் போன எந்த உடலோ, தீயாகிக் கொண்டிருந்தது. பாலன் எதுவோ எண்ணினுன். முதல் சம்பளம்—இரண்டு ரூபாய்—எண்ணற்ற ஆசைகள்— எல்லாமே தீ! தீ! தீ!

ஏதோ பேச்சரவம் கேட்டது. திரும்பிப் பார்க்க எண்ணமில்லை அவனுக்கு!

"யாரோ ஒரு தம்பி உனக்கு உயிர் கொடுத்தான் கண்ணு. அந்த நல்லதம்பி மட்டும் ஓடம் போக்கியிலிருந்து உன்னைக் காப்பாற்றியிராவிட்டால்......அய்யோ! நினைக்கவே பயமாயிருக்கிறதே! அந்த நல்லதம்பி வாழட்டும்! சந்தோஷமாய் வாழட்டும்! கோடி நலம் பெற்று குதூகலமாய் வாழட்டும்!..."

பிள்ளை தப்பிய மகிழ்ச்சியில் அந்தத் தாய்தான் வாழ்த்திக் கொண்டு சென்றுள், சுடுகாட்டுத் தீயில் தன் கண்களைப் பதித்திருக்கிறனே, அந்தப் பாலனை!

பாலனுக்குத் தூக்கம் வந்தது. ஆற்று மணலிலேயே தூங்க ஆரம்பித்தான். தூங்கட்டும்; பொழுது விடிந்தால் வேலைக்குப் போக வேண்டுமல்லவா? நிம்மதியாகத் தூங்கட்டும்! அதோ, ஓடம் போக்கியின் சலசலப்பு அவனுக்குத் 'தாலாட்டு'ப் பாடுகிறது!

—சொர்ணம்

கண்டதும், காணாததும்!

Anand

"லலி, எங்கே 'டிரஸ்' செய்து கொண்டு வெளியே கிளம்பி விட்டாய்?"

லலிதா விழிகளைச் சுழலவிட்டு, கணவனைப் பார்த்து ஒரு புன்னகை பாணத்தை வீசினாள். அவர் மனைவியின் அழகிலே சொக்கி அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்!

"மாதர் சங்க நிகழ்ச்சியின் 'புரோகிராமை' நீங்கள் பார்க்கவில்லையா? இன்று 'விபச்சார ஒழிப்பு நாள்' அல்லவா? எங்கள் சங்கத்தின் சார்பில் 'ருக்மணி ஹாலில்' ஒரு பொதுக் கூட்டம். மாதர் முன்னேற்ற சங்கத்தின் பிரபலஸ்தர்களில் ஒருவரான வஸந்தலால் என்பவர் இதற்காகவே பம்பாயிலிருந்து இங்குவருகிறார். நல்ல பணக்காரர். இளைஞர். பாரதப் பெண்களின் பண்டைக் கலாச்சாரத்தைக் காப்பதையே வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டு அதற்காகவே வாழ்க்கையை அர்ப்பணித்து விட்டவர். சாஸ்திரப் பாண்டித்யமும், சர்வ கலாவல்லமையும், சமதர்ம நோக்கமும் கொண்டவராம். தமிழ்கூட நன்றாகப் பேசத் தெரியுமாம். நீங்களும் அவசியம் வாருங்கள். விபச்சார ஒழிப்பில் ஆர்வம் கொண்டுள்ள உத்தியோகஸ்தர்கள், மந்திரிகள் எல்லோரும் வருகிறார்கள். இன்று நான்தான் 'மெய்ன் ஸ்பீக்கர்'!"

"பேஷ், பேஷ்! இன்றைக்கு ஜமாய்ச்சுடுவேன்னு சொல்லு. நீ பேசவா வேணும். உன் முக லக்ஷணம் ஒண்ணே போதாதா? உன் ருபலாவண்யத்திலே 'சதஸ்' அப்படியே மெய்மறந்து போயிடாதா? உன் பொன்னிற உடம்போடு ஒட்டிக் கொண்டிருக்கும் சிவப்பு ஜார்ஜெட் — சந்தணநிறச் சோலி ப்ரமாதம் போ!"

"போங்கள், போங்கள். எப்பொழுது பார்த்தாலும் என்னைக் கேலி பண்ணுவதுதான் உங்களுக்கு வேலை. அது கிடக்கட்டும். நீங்கள் வரப் போகிறீர்களா, இல்லையா?"

அவள் கொஞ்சும் பாவனையில் பேசினாள். அவரோ அவளுடைய அழகு வெள்ளத்தில் அமிழ்ந்து கிடந்தார்.

கைக் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி நாலரையாகியிருந்தது. ஐந்து மணிக்குக் கூட்டம் ஆரம்பம். அவள் போகத் துடித்துக் கொண்டிருந்தாள்.

"லலி, உன்னிடம் ஒன்று சொல்ல மறந்து விட்டேனே. இந்த 'இன்விடேஷனை'ப் பார்த்தாயா?" என்று கூறிக் கொண்டே, ஸ்ரீதர் லலிதாவின் கையில் அச்சடித்த கார்டு ஒன்றைக் கொடுத்தார். மை வழியும் கண்களை அகல விரித்து, ஆர்வத்தோடு அதைப் படித்தாள்.

"அப்படிச் சொல்லுங்கள். உங்களுக்கும் ஒரு 'என்கேஜ்மெண்ட்' இருக்கு. நாட்டிய பூஷணி ரத்னமாலா நாட்டியம்னு அவசியம் போகத்தான் வேணும். எனக்கு மட்டும் இந்த 'மீட்டிங்' இல்லையானால் அவசியம் உங்களோடு வந்து விடுவேன். இரவு வந்து விடுவீர்களல்லவா?"

"என்ன லலி, இது அசட்டுக் கேள்வி? நாட்டியம்தானே பார்க்கப் போகிறேன்!"

"ஒரு வேளை அப்படியே 'ஜென்ட்ஸ் ஜிம்கானா'வுக்குப் போய்விட்டு வருவீர்களோ என்று கேட்டேன். நான் இப்பொழுது போக வேண்டுமே, பிறகு, காருக்கு நீங்கள் என்ன செய்வீர்கள்?"

"இதோ பத்து நிமிஷத்தில் நானும் புறப்பட்டு விடுகிறேன். உன்னைக் காரிலே கொண்டு போய் 'ருக்மணி ஹாலில்' இறக்கி விட்டு, நான் நாட்டியக் கச்சேரிக்குப் போகிறேன்......"

"ஐயையோ! இப்பொழுதே மணி நாலு நாற்பது ஆகிவிட்டதே. நீங்கள் புறப்பட 'லேட்' ஆகும். அப்புறம் என்னுடைய 'பங்க்ட்ச்சுவாலிடி'யை என் சிநேகிதிகள் கேலி பண்ணுவார்கள்."

இதுவரையில் அவர்களுடைய உரையாடலை மறைவில் நின்று கேட்டுக் கொண்டிருந்த கார் 'டிரைவர்' இப்பொழுது குறுக்கிட்டான். "நீங்கள் 'டிரஸ்' பண்ணுவதற்குள் அம்மாவைக் காரில் கொண்டுபோய் விட்டு விட்டுத் திரும்பி விடறேனுங்க," என்று ஸ்ரீதரிடம் கூறிவிட்டு, லலிதாவைப் புன்முறுவலோடு பார்த்தான். "வரட்டுமா?" என்று ஸ்ரீதரைக் கேட்டுக் கொண்டே, டிரைவர் பின்தொடர, 'போர்டிகோ'வில் நின்று கொண்டிருந்த காரை நோக்கி நடந்தாள். ஹிந்தி 'ட்யூன்' ஒன்றை விசிலடித்துக் கொண்டே ஸ்ரீதர் 'பாத்ரூமை' நோக்கி நடந்தார்!

★

'ருக்மணி ஹாலில்' நகரத்துக் கனதனவான்களும் நாரீமணிகளும் நிரம்பி வழிந்தனர். மெருகு குலையாத கார்கள் ஏராளமாக அணிவகுத்து நின்றன வெளியே. பந்தலில், 'வழுக்கிவிழுந்தவனிதையரே, வாழ்வு பெற முயலுங்கள்!' 'விபச்சாரம் பெண்ணினத்தின் சாபக்கேடு!', 'வறுமையைப் போக்குங்கள்; வனிதையர் துயர் தீருங்கள்!' — இப்படியாகக் கோஷங்கள் எழுதப்பட்ட அட்டைகள் தொங்கிக் கொண்டிருந்தன. மண்டபமெங்கும் கண்கவரும் கட்டழகியர், அங்கப்பொலிவு மிளிர ஆடையணிந்து, வண்ணத்திப் பூச்சிகளாக வட்டமிட்டுக் கொண்டிருந்தனர். நவநவபாணியில் உடை போட்டுக் கொண்டிருந்த காளையர், தங்கள் கண்களை அந்த அன்னப் பேடுகளின்மீது மேயவிட்டுக் கொண்டிருந்தனர். மேடையின் மேல் 'விபச்சார ஒழிப்பு நாள்' என்ற அறிவிப்புப் பலகை கம்பீரமாகக் காட்சியளித்தது!

பி.சி.கணேசன்
பி.எஸ்ஸி;பி.டி.

தலைவர் வஸந்தலால், லலிதாவும் மற்ற ஆண் பெண் பிரமுகர்களும் பின்தொடர மண்டபத்தினுள் நுழைந்தார். தேவகானவாணி இராஜலட்சுமியின் இன்னிசைப் பிரார்த்தனையோடு விழா ஆரம்பமாயிற்று. தலைவர் வஸந்தலால் பேசுகையில் குறிப்பிட்டார்: 'அசோக வனத்தில் அடைபட்டுக் கிடந்த சீதாப் பிராட்டியின் கற்பு மகிமையை யாரே அறியவல்லார்? ஐவருக்குப் பத்தினியாகிக் கற்பு நிலை காத்த பாஞ்சாலியின் பெருமையை எவரால் அளவிட்டு உரைக்க முடியும்? குஷ்டரோகக் கணவனைக் கூடையிலே சுமந்து சென்று வேசையரிடம் கொண்டு விட்ட நளாயனி...'—இப்பொழுது கூட்டத்தில் சிலர் எழுந்து, 'இது விபச்சார ஒழிப்பு நாள் கூட்டம். இங்கு விபச்சாரிகளிடம் கணவனை அழைத்துச் சென்ற நளாயினியின் கற்பு பற்றி பேசுவது முறையல்ல' என்று ஆட்சேபிக்கவே, தலைவர், கற்பில் பல வகைகள் உண்டு என்று 'தத்துவார்த்தமான' விளக்கம்கூறி ஒருவாறு பேச்சை முடித்தார்.

விபச்சார ஒழிப்பு விஷயத்தில் அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ள தீவிர நடவடிக்கையை விளக்கி அரசாங்க அதிகாரி பேசினார்: 'கடந்த ஒரு வார காலமாக விபச்சாரத்தை ஒழிக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை பெரும் பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. விபச்சார விடுதிகள் நாட்டில் பெருகுவதும், விபச்சாரிகள் வீதிகளின் நடைபாதையோரங்களில் நின்று கொண்டு உடலை விலை பேசுவதும், மிகவும் அருவருக்கத்தக்கவை. ஆகவே விபச்சாரிகளை வேட்டையாடியும், விபச்சார விடுதிகளைச் சோதனையிட்டும், அது சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிக்கும் தீவிர முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இதற்காகவே 'விபச்சார ஒழிப்பு நாள்' என்று ஒருநாள் ஏற்படுத்தி பொது மக்களின் ஒத்துழைப்பைக் கோருகின்றது. இது விஷயத்தில் அக்கறையோடு உழைக்கும் ஸ்ரீமதி லலிதா ஸ்ரீதர் அவர்களையும், பிரபல பொதுநலத் தொண்டர் ஸ்ரீஜத். வஸந்தலால் அவர்களையும் உங்களனைவரின் சார்பாகவும் நான் பாராட்டுகிறேன்.'

பின்னர் லலிதா விபச்சார ஒழிப்பில் பெண்களின் பெரும் பங்கு பற்றிப் பேசினார். அபிநய பாவங்களோடு, அழகுப் பல் வரிசை தெரிய அவர் ஆற்றிய உரை ஏகமனதான 'கரகோஷத்தை'ப் பெற்றது. விபச்சார ஒழிப்பு பற்றிக் காரசாரமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின் விழா இனிது முடிந்தது!

★

லலிதா ஸ்ரீதரின் இல்லத்தில் அன்று இரவு வஸந்தலாலுக்கு ஒரு இனிய 'எளிய' விருந்துபசாரம் நடை பெற்றது.

'போன்' மூலமாகவே சமையல்காரனுக்குக் கட்டளையிட்டு விருந்துக்கு ஏற்பாடுசெய்துவிட்டாள் லலிதா. விருந்து பற்றிய விஷயத்தைக் கணவனுக்கும் 'போன்' மூலம் அறிவித்தாள். ஸ்ரீதரனோ குறித்த நேரத்தில் விருந்துக்கு வந்துவிட முயற்சிப்பதாயும், அப்படித் தான் வராவிட்டால் தனக்காகக் காத்திருக்க வேண்டாமென்றும் 'போனி'லேயே பதில் கூறிவிட்டார்.

விருந்து விமரிசையாக நடந்தது. ஆனால் ஸ்ரீதர் மட்டும் வரவில்லை! வஸந்தலால் வருத்தப்பட்டார். லலிதாவைப் பற்றிய பாராட்டுரைகளை ஸ்ரீதருக்குச் சொல்லவேண்டுமென்று அவருக்கு நிரம்ப ஆசை! ஆகவே, ஸ்ரீதர் வராதது அவருக்குப் பெரும் ஏமாற்றமாகவே இருந்தது!

விருந்தினர் எல்லோரும் கலைந்து போய்விட்டனர். இரவு மணி பத்துக்கு மேலாகிவிட்டது. லலிதாவும், வஸந்தலாலும் திறந்த மாடியில் உட்கார்ந்து, சமுதாயப் பிரச்சினைகள் குறித்து அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு முன் தட்டில் பழ வகைகள் நிரம்பியிருந்தன. ஊதுவத்தியின் இனிய மணம் எங்கும் நிரம்பியிருந்தது. மங்கலான ஒளியோடு நிலா எரிந்துகொண்டிருந்தது!

கரிய மருண்ட கேசம், பெரிய விழிகள், எடுப்பான மூக்கு, உணர்ச்சியூட்டும் உதடுகள், அதற்கு அழகாகக் கரை கட்டி நிற்கும் மெல்லிய மீசை — வஸந்தலால் மன்மத அவதாரமாகக் காட்சியளித்தார்.

"லலிதா, இன்று உங்கள் பேச்சு தெவிட்டாத தேன் விருந்து!" — புகழ் மாலையைச் சூட்டிவிட்டு மௌனமாக அவளுடைய உணர்ச்சிகளை எடை போட்டார்.

லலிதா லேசாகச் சிரித்தாள். பொன்னிறக் கன்னங்கள் உணர்ச்சியால் சிவப்பேறின. "பழங்களைச் சாப்பிடாமல் அப்படியே தட்டில் வைத்துவிட்டீர்களே!"

"ஹ்ம், சாப்பிடுகிறேன்......... ஏன், நீங்களும் சாப்பிடுங்கள்!"

"ஆஹா, இருவருமே சாப்பிடுவோம்"

தட்டிலுள்ள திராட்சைப் பழங்களை ஒவ்வொன்றாக எடுத்து இருவரும் சுவைத்தனர். பழங்களை எடுக்கும்பொழுது வேண்டுமென்றோ, அன்றி சந்தர்ப்பத்தாலோ இருவருடைய கரங்களும் தீண்டின. மறுபடியும் பழங்களை எடுக்கும்பொழுது, இந்த நிலையைத் தவிர்க்கவேண்டுமென்ற எண்ணம் இருவருக்குமே தோன்றவில்லை!

"ஆப்பிளைச் சாப்பிடுங்கள், வஸந்த்" என்று கூறிக்கொண்டே, ஆப்பிள் பழத்தை எடுத்து லலிதா கத்தியால் நறுக்க ஆரம்பித்தாள்.

"அடடே, கையை அறுத்துக் கொண்டு விடாதீர்கள்!" என்று கூறிக்கொண்டே, அவள் கையைப் பிடித்து ஆப்பிள் பழத்தைப் பிடுங்கினார் வஸந்தலால். அவளும் விடவில்லை. இருவரிடையேயும் 'கைகலப்பு' ஏற்பட்டது! இருவருடைய உள்ளங்களும் இன்ப கானம் இசைத்தன!

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

கொள்கை வளருது தோரம் போலே!

பந்தநல்லூர்

..-..-55 வெள்ளிமாலை 5மணிக்கு கடைத் தெருவுக் கருகில், தோழர் அறிவுடைநம்பி அவர்கள் தலைமையில், புலவர் இராம. சொக்கலிங்கம், தோழர்கள் ம. கோ. மணி, என். அசோகன்—ஆகியோர் பேசுவர். இரவில் 'கடைசி முத்தம்' என்ற நாடகமும் நடைபெறும்.

மேலப்பாளையம்

..-9-55வெள்ளி மாலை 8மணிக்கு கடைத்தெரு மைதானத்தில், தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள் தலைமையில், தோழர்கள் ச. வீரபாகு, நா. சங்கரலிங்கம்—ஆகியோர் பேசுவர்.

பட்டுக்கோட்டை

..-9-55 சனிமாலை4-30 மணிக்கு காசாங் குளம் வட கரையில், தோழர் எம். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில், தோழர்கள் டி. கே. சீனிவாசன், என். எஸ். இளங்கோ, கலாநேசன், கே. அடைக்கலம்—ஆகியோர் பேசுவர்.

சென்னை (திருவல்லிக்கேணி)

..5-9-55 ஞாயிறுமாலை 6மணிக்கு திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தில், (1-2,சிவராமன்தெரு) திராவிட நாடு பிரிவினைநாள் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் கா. அப்பாதுரை அவர்கள் தலைமையில், தோழர்கள் இளம்பரிதி, மா. பா. சாரதி, எம். கே. மணி, கபிலன், தாமோதரன்—ஆகியோர் பேசுவர்.

சென்னை (14-வது வட்டம்)

..5—9—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு, கொத்தவால் சாவடிக்கு அருகில் [ஆண்டியப்பிள்ளைத் தெரு] திராவிடநாடு பிரிவினை வாரப் பொதுக் கூட்டமும், மாநில மாநாட்டு நிதியளிப்பும் நடைபெறும். தோழர் கோ. செங்குட்டுவன் அவர்கள் தலைமையில், அறிஞர் அண்ணா, தோழர்கள் டி. ஷண்முகம் எம். எல். ஏ., இளம்பரிதி ஆகியோர் பேசுவர்.

பரமக்குடி

..-9-55திங்கள் இரவு 9மணிக்கு, குமரன் படித்துறையில், தோழர் எம். ஏ. வகாப் அவர்கள் தலைமையில், தோழர்கள் இரா. சு. தங்கப்பழம், ஆர். எஸ். பிரகாசம்—ஆகியோர் பேசுவர்.

குடியேற்றம்

..-9-55 செவ்வாய் மாலை 6 மணிக்கு, பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுவார் — அப்போது மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

சங்கரநயினர் கோயில்

..-10-55 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு, காந்தி திடலில், தோழர் டி. ஆர். சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசுவார்.

உங்கள் பார்வை

'உதய ஒளி'

சென்னை-12
17-9-55

ஆசிரியா அவர்களுக்கு,

16-9-55 இதழ் முரசொலியில் 'உதயஒளி' என்ற தலையங்கத்தை படித்தேன். மிகவும் பூரிப்படைந்தேன். உண்மையில் உதயஒளி என் உள்ளத்தைக் கவர்ந்த இன்ப ஒளி என்று கூற ஆசைப்படுகிறேன். சிறந்த கருத்துக்களை அழகான அடுக்குத் தொடரில் படிக்கப் படிக்க உணர்ச்சியை அள்ளி ஊட்டும் வகையில் எழுதியிருக்கிறீர்கள்.

—எம். பார்த்தசாரதி

★

நல்ல அறிமுகம்!

திருவனந்தை
15-9-55

ஆசிரியருக்கு,

9-9-55 'முரசொலி'யில் 'கேரளத்து கட்டபொம்மனை' சந்தித்தேன். அந்த வேலுத்தம்பி தளவாயின் வரலாறு பற்றி மாணவப் பருவத்தில்—நாலாவது வகுப்பில் சரித்திரப் பாடப் புத்தகத்தில் படித்திருக்கிறேன். வெள்ளையன் ஆட்சிக்குட்பட்டு திருவாங்கூர் இருந்த அந்தக் காலத்தில், வெள்ளை ஆட்சியின் சட்டத்திற்குட்பட்டு. அனுமதியும் பெற்று வெளியான அந்த வரலாறே, வேலுத் தம்பியைத் தைரிய புருடனாகவும், இலட்சிய வீரனாகவும், தியாகச் சுடராகவும் தீட்டிக் காட்டியதென்றால், அதிக அளவு மறைக்கவும் பட்டிருக்கலாம். மேலும், அவன் காட்டிக் கொடுக்கும் கயமைக் குணத்தினரால் எவ்வளவோ துன்பங்களுக்கு ஆளானான் என்பதற்கான உண்மைகள் மிகப்பல நடமாடுகின்றன... 'முரசொலி'யில் வேலுத் தம்பியை நன்கு 'அறிமுக'ப் படுத்தியிருக்கிறீர்கள். நன்று; நன்றி!

—சையது ஊசுப்

★

வாழ்த்துகின்றோம்!

சேலம்.
31—8—55.

எங்கள் பள்ளியில் தேர்வின் பொழுது, அந்நிய மொழியாகிய இந்தி மொழியில் ஓர் தேர்வு வைப்பார்கள். அது எப்பொழுது? மாலை 2 மணியிலிருந்து 4 மணி வரை இருக்கும். மணி அடித்ததும் கையில் வெள்ளைப் பேப்பரில், கருப்பு மையால், அவர்கள் மனம் போன படி கிறுக்கப்பட்டிருக்கும் கேள்வித்தாளைக் கொடுப்பார்கள். அதுதான் இந்தி மொழியாம்! அடுத்த அரை நொடிக்குள், ஒன்றும் எழுதாத விடைத் தாள்களை ஆசிரியர்கள் கையில் கொடுத்துவிட்டு மாணவர்கள் வெளியே கிளம்பி விடுவார்கள். மிஞ்சினால் 5 அல்லது 6 பேர் 15 நிமிடம் உட்கார்ந்து யோசித்து எழுதுவார்கள். வெளியே சென்ற மாணவர்கள் திரைப் படம் பார்க்க எந்த தியேட்டருக்காவது போய்க் கொண்டிருப்பார்கள். எந்தப் பள்ளி மாணவனும் பரிட்சையின் போது படம் பார்க்க மாட்டான். ஆனால் இந்தி பரிட்சை எங்களுக்கு படம் பார்க்க நேரம் கொடுக்கிறது ஆகவே அதை வாழ்த்துகின்றோம்!

அன்பன்,
—கு. தெட்சிணாமூர்த்தி.

★

வ. ஆ. மாவட்ட திருவள்ளுவர் கழகங்களுக்கு

"வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள எல்லா நகரங்களிலும், சிற்றூர்களிலும், "திருவள்ளுவர்" பெயரால் நடத்தப்பட்டுவரும் கழகங்கள்—படிப்பகங்கள்—மன்றங்கள்—அனைத்தையும் ஒன்று கூட்டி "வ. ஆ. மாவட்ட திருக்குறள் மத்யகழகம்" என்ற நிறுவனத்தை ஏற்படுத்த முயற்சி செய்து வருகிறோம்.

எங்களுடைய முயற்சிக்கு வ. ஆ. மாவட்டத்திலுள்ள எல்லா திருவள்ளுவர் கழகங்களும் ஆதரவளித்து, ஒவ்வொரு கழகமும் அதனுடைய அமைப்பையும், அமைப்பாளர்களின் விவரத்தையும், எங்களுடைய முகவரிக்கு எழுதி அனுப்புமாறுக் கேட்டுக் கொள்ளுகிறோம்." என்று ஆம்பூர் திருவள்ளுவர் கழக செயலாளர் எஸ். அன்னையன் அறிவிக்கிறார்.

அறிவொளி பரப்ப அக்டோபர் முதல்நாள் வெளிவருகிறது!

'அறிவொளி'

(திராவிடர் முற்போக்கு வார இதழ்)

ஆசிரியர்: பால்வண்ணன். விலை அணா 2.

ஏஜண்ட் இல்லாத ஊர்களில் முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு:

'அறிவொளி'
38, சாமிப் பண்டாரம் தெரு, சென்னை-2.

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

வஸந்தலால் வென்றுவிட்டார்! ஆப்பிள் பழத்தை நறுக்கித் தட்டில் போடாமல் அவள் கைகளில் கொட்டினார். அவளும் அதைக் கரங்களில் வாங்கிக்கொண்டு ஒவ்வொன்றாக எடுத்து அவர் வாயில் போட்டாள்.

"ஆப்பிள் சுவை எப்படி?"

"சுவை, கரத்திலா அல்லது கனியிலா என்றுதான் தெரியவில்லை!"

'கரத்தில் சுவையென்று அதையே சுவைத்து விடாதீர்கள்...'

அவள் எச்சரித்தாள். ஆனால், அவரோ அதை அழைப்பாகவே கருதி...

தெருவில் ஏதோ சந்தடி. ஜனங்கள் கூச்சலிட்டு ஆரவாரம் செய்து கொண்டிருந்தனர். வஸந்தலாலின் பிடியிலிருந்து மெதுவாக விலகி, லலிதா கீழேயிறங்கிப் போய், என்ன விஷயம் என்று வேலைக்காரர்களை விசாரித்துவிட்டு, சற்று நேரத்தில் திரும்பிவந்தாள்.

'லலிதா, அங்கே என்ன கூச்சல்?'

'விபச்சார ஒழிப்புப் படையினர் விபச்சார விடுதிகளை சோதனையிட்டு, அங்கிருந்த விபச்சாரிகளைக் கைது செய்து லாரியில் ஏற்றிச் செல்லுகிறார்களாம். அதற்காகத் தான் அத்தனை கூச்சல்'

வஸந்தலால் மறுமொழி பேசவில்லை.

'வாருங்கள், கீழே போகலாம். உங்களுக்குத் தூக்கம் வரவில்லை?'

லலிதா, மாடியிலிருந்து இறங்கினாள். வஸந்தலாலும் மௌனமாக அவளைப் பின் தொடர்ந்தார். இருவரும் 'ஹாலு'க்குள் சென்றனர். லலிதா விளக்கை அணைத்தாள். இருள்திரை இருவரையும் போர்த்தி மறைத்தது!

★

டெலிபோன் மணியின் 'கலகல' வென்ற ஒலியைக் கேட்ட பொழுதுதான் லலிதா கண் விழித்தாள்! எழுந்து போய் மின் விளக்கைப் போட்டாள். வஸந்தலால் பரம திருப்தியோடு தூங்கிக் கொண்டிருந்தார். 'போனை' எடுத்துக் காதில் வைத்துக் கொண்டாள்.

'ஹலலோ, யாரது...?'

'...............!'

'நான்தான். ஸ்ரீதரின் மனைவி லலிதா பேசுகிறேன்...அவர் வீட்டிலிருந்துதான்...'

'இன்று நாங்கள் விபச்சார விடுதிகளை சோதனையிட்டபோது நாட்டியக்காரி ரத்னமாலாவும், உங்கள் கணவர் ஸ்ரீதரும், ஒரு விபச்சார விடுதியில் இருப்பதாகக் கண்டு கைது செய்திருக்கிறோம்'

'என் கணவரா? விபச்சார விடுதியிலா? நம்பமுடியவில்லையே சார்!'

'இந்தக் காலத்தில் எதையம்மா நம்ப முடிகிறது? விபச்சார ஒழிப்பில் அதி தீவிரமாக முனைந்துள்ள உங்களுடைய கணவரே...எங்களுக்கே மிகவும் வருத்தமாகத் தான் இருக்கிறது'

'இப்பொழுது நான் என்ன செய்யலாம் சார்!'

'உடனே புறப்பட்டு வாருங்கள். பொழுது விடிந்தால் விஷயம் ஊர் சிரித்துவிடும். அதற்குள் ஏதாவது செய்யமுடியுமா என்று பார்க்கலாம்'

'உடனே புறப்பட்டுவிட்டேன். ரொம்ப 'தேங்ஸ்'!'

மணி இரண்டடித்தது. வஸந்தலாலை எழுப்பி விஷயத்தைச் சொல்ல அவள் விரும்பவில்லை. சற்று நேரத்திற்கெல்லாம், விபச்சாரக் குற்றத்தில் அகப்பட்ட கணவனை மீட்க, கற்புக்கரசி லலிதா காரில் சென்று கொண்டிருந்தாள்!

ஃ

ஆற்றங்கரையிலே..

ஊ.......

முனிசிபாலிட்டி கட்டிடத்திலிருந்த பெரிய சங்கு ஊதத் தொடங்கியது! "மணி ஆறு. தூங்கும் தோழர்களே! எழுவீர்! எழுவீர்!" என்று 'பூபாளம்' பாடியது. யுத்த காலத்திலே அது அபாயச் சங்காம்—ஆனால் இப்போதோ திருவாரூரின் தூங்குமூஞ்சிகளுக்கு மட்டும் 'ஆகாத' சங்கு—மணி காட்டும் கருவி! இப்படி ஒரு நல்ல காரியத்திற்கு அதைப் பயன்படுத்தினார்கள் முனிசிபாலிட்டியார்.

தன் குடிசையைவிட்டு வெளியே வந்தான் பாலன். "மணி ஆறு; நாழிகையாகி விட்டதே!" என்று தனக்குள் பேசிக் கொண்டான். நடந்தான். வேகமாக நடந்தான்.

ஆமாம்; அவன் நடையிலே புதிய வேகம்தான் இருந்தது. இருக்காதா? அது என்ன சாதாரண நாளா? அவனது ஒரு மாத மிருக உழைப்புக்கு பலன்தரும் நாளல்லவா! பசியும் பட்டினியும் பள்ளியை விட்டுத் துரத்த-கடமையும் கண்ணீரும் வேலை தேடி விரட்ட — சென்ற மாதம்தான் அவன் வேலையில் அமர்ந்தான். என்ன வேலை? ஆறுவது வகுப்பை அரைகுறையில் முடித்துவிட்ட பத்து வயதுப் பையனுக்கு 'வேலை தேடித் தரும் ஸ்தாபன'மா உதவும்? அல்லது குமாஸ்தா உத்தியோகம்தான் கிடைக்குமா? ஒரு 'டீக் கடை'யில் மேஜை துடைக்கும் தொழில்—இதுதான் அவன் படிப்புக்குக் கிடைத்த பரிசு!

இன்று...? பதினைந்தாம் தேதி! அவன் முதலாளி தேதியைத் திட்டிக் கொண்டே, அவனுக்கு சம்பளம் தரப்போகிறார்; பெரிய மனது பண்ணி நேற்றே சொல்லி விட்டார் அப்படி.

இப்போது சொல்லுங்கள், பாலன் படைபயிலும் வீரன் போல நடைபயிலுவதில் புதுமை என்ன?

குடிசைகளுக்குப் பக்கத்திலே—மன்னிக்க; ஏழைகளின் 'காலனி' அது—நிமிர்ந்து நிற்கிறது ஒரு சினிமா கொட்டகை. 'பேபி டாக்கீஸ்' என்று பளிச் சென்று தெரிந்தன எழுத்துக்கள். பாலன் நின்றான். புதிய சுவரொட்டிகள் நிறைய ஒட்டப்பட்டிருந்தன. ஒரு ஏழைத் தங்கை — அவளது தோளின்மேல் கையைப் போட்டுக் கொண்டு ஒரு சோகச் சிறுவன். அவளுக்கு அவன் அண்ணனா? இருக்கலாம்; இருக்கலாம். அவன் முகத்தில் ஒரே ஏக்கம்—துக்கம். ஆனாலும் அவைகளை மூடி மறைத்தல்லவா கிளம்புகிறது சகோதரப் பாசம்!

"இன்றைக்கு எப்படியாவது இந்தப் படத்தைப் பார்த்துவிட வேண்டும்...தவறாமல் தங்கச்சியையும் அழைத்து வர வேண்டும். பாவம். சினிமாவே பார்த்ததில்லை என் பாப்பா. இனி என்ன? அன்பு அண்ணன் சம்பாதிக்கிறான்; தங்கையின்பாடு கொண்டாட்டம் தானே!" என்று எண்ணினான். தானாகவே சிரித்துக் கொண்டான். "ஏ, சினிமாக் கொட்டகையே! இன்று இரவு என்னை எதிர் பார்த்துக் கொண்டிரு" என்று அந்த கற்கோட்டையிடம் பேசினான். நடந்தான்.

கொஞ்சதூரம் நடந்திருப்பான்; குறுக்கிட்டது ஆற்றுப் பாலம். ஓடம் போக்கி என்று பெயர் அந்த ஆற்றுக்கு. சிரிப்புத்தான் வருகிறது. அதில் ஓடம் தவழ்ந்து ஒருவருமே பார்த்ததில்லை. ஆனால் அது பலருக்கு'ஓய்வுபோக்கி'யாக மட்டும் இருந்து வருகிறது. அதில் ஆண்டில் ஆறுமாதங்கள் தண்ணீர் வெள்ளம் போல் ஓடும். அப்போது பாலத்திலிருந்து தண்ணீருக்குள் குதித்துக் குளிப்பார்கள், நீந்தத் தெரிந்தவர்கள். அந்த காசில்லா'சர்க்கஸை'க் காண ஒரு கூட்டமே நிற்கும். நீர் வற்றிவிட்டாலோ, கடல் காணாத திருவாரூருக்கு அந்த ஆறுதான் 'கடற்கரை!' ஆற்று மணல்—அதிலே திட்டு திட்டாக மனிதர் கூட்டம்— இப்போது சொல்லுங்கள், அது 'ஓய்வு போக்கி'தானே!

பிறை வானம்

பிள்ளைகள் பகுதி...

பாலன் பாலத்தில் ஏறினான். எட்டிப் பார்த்தான். தண்ணீர் 'சோ' வென்று பாய்ந்து கொண்டிருந்தது. அவன் மனதிலும் அப்படித்தான் மகிழ்ச்சி அலை மோதிக் கொண்டிருக்கிறது. "அப்பப்பா! ஆற்றில் குதித்து—நீந்தி—விளையாடி ஒரு மாதம் ஆகி விட்டது. இன்றைக்கு சம்பளமா; நாளைக்கு 'லீவு' போட்டுவிட வேண்டும். பின்னே என்னவாம்! வார விடுமுறைதான் இல்லை; மாத விடுமுறை கூடவா கிடையாது! நாளைக்குக் கண்டிப்பாக நீரில் கொண்டாட்டம் போடவேண்டும்" என்று முடிவு செய்தான். மேலும் நடந்தான். பாலத்தைத் தாண்டினான். கடைத்தெருவில் அடியெடுத்து வைத்தான்.

"ஏய் பாலா! எங்கேடா போறே? உன் அப்பன் இருக்கானா வூட்லே...?"

"யாரது; நடுத்தெருவிலே இப்படி மரியாதையில்லாமல் கூப்பிடுவது?" என்று முணுமுணுத்துக் கொண்டே திரும்பினான் பாலன். வேறு யாருமல்ல; அவன் குடியிருக்கிறானே, அந்தக் குடிசையின் சொந்தக்காரி—ஒரு பாட்டி—அவள்தான் இப்படிக் கேட்டாள். அவள் ஒரு கறிகாய் வியாபாரி! 'மார்க்கெட்'டுக்கு சாமான் எடுத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தாள் அதிகாலையில்.

"ஏன் பாட்டி?" பாலன் கேட்டான்.

"ஏனா? இன்னிக்கு தேதி என்னா? என்னடா? சொல்'லேண்டா! பதினெஞ்சு! இன்னும் வாடகை கொடுக்கலேடா உன் அப்பன்! இப்படி கிழவியை மோசம் பண்ணுறானே, அவன் உருப்படுவானா? பாவி; படுபாவி..."

பாட்டியின் 'பாமாலை' நீளுவதற்குமுன் குறுக்கிட்டான் பாலன். "போதும் பாட்டி! அதிகமா பேசாதே! எவ்வளவு வாடகை?"

"ஒரு ரூபா எட்டணாதான் வாடிக்கை. அடிக்கடி 'வாடகையை குறை குறை'ன்னான். இந்த மாசம் ஒரு ரூபாயும் ஏழே முக்காலணவும் கொடுடா—போதும்'ன்னேன். குறைச்சதுக்கு அப்புறமும் கொடுக்கலியே இன்னும் அந்த சோம்பேறி!"

"நிறுத்து பாட்டி! இன்னிக்கு என் சம்பளம்! வாடகைதையும்—ஒரு ரூபாய் எட்டணாவையுமே சாயந்திரம் உன் முகத்திலே வீசியெறிவேன். அதிகமா பேசாதே!"—பாலன் 'வீர்'ரென்று நடந்தான். அவனுக்கு ரோசம் வந்துவிட்டது. பின்னே என்ன? அப்பாவைப் பற்றி மகனிடம் திட்டலாமா? அதுவும் சம்பாதிக்கும் மகனிடம்!

அந்த வேகத்தோடு டீக்கடையை அடைந்தான் பாலன்.

✶

பொழுது சாயும் நேரம்!

பாலனின் உள்ளத்திலே ஒரே பதட்டம்! வேலையில் அர்த்தமில்லாத சுறுசுறுப்பு! 'என்ன, இன்னும் இந்த முதலாளி பேசாமல் இருக்கிறார்;ரொம்பமோசம்'ப்பா!' என்று தனக்குள் ஆயிரம் முறை பேசியிருப்பான்.

'கூ' என்று கூப்பிடு தூரத்தில் இருந்த புகைவண்டி நிலையத்திலிருந்து 'ரயில்' சத்தம் எழும்பியது. "சரிதான்; தஞ்சாவூர் ரயிலும் புறப்பட்டுவிட்டதே! மணி எட்டரை!" என்று அலுத்துக் கொண்டான்.

நேராக முதலாளியின் ஒட்டை மேஜையிடம் சென்றான். அப்பப்பா! அவரது முகத்தில்தான் எத்தனை கடுகடுப்பு! பாலனுக்கு திருப்தி ஏற்பட்டது. ஏன் தெரியுமா? முதலாளி சினந்தால் பணத்திற்கு செலவு என்று அர்த்தம்!

இரண்டு நிக்கல் நாணயங்கள்—இரண்டு ரூபாய்கள்! பாலனுக்கு சம்பளம் கிடைத்து விட்டது. நடுநடுங்கும் கைகளுடன் வாங்கிக்கொண்டான். அழுக்கடைந்த கால்சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டான். நடந்தான்.

கடைத்தெருவில் புகுந்தான். பூக்கடை—பலகாரக்கடை—இப்படிப் பல கடைகள்! பாலன் 'ராஜா' மாதிரி நடந்துகொண்டிருந்தான். 'பாம்பே ஸ்டோர்'—புதுமாதிரியான துணிக்கடை ஒன்றுஅவன் கண்களில் பட்டது. கடை வாசலில் ஒரு பொம்மைப் பெண் — அவள் உடலில் புத்தம் புதிய துணிகள்! பாலன் மனதில் சட்டென்று தங்கை வந்து நின்றாள். தங்கைக்கு ஒரு சட்டைத் துணி எடுத்தால்...வேகமாக கடைக்குள் நுழைந்தான்.

"வியாபாரம் முடிந்துவிட்டதப்பா! நாளைக்குத்தான்!"—கூண்டு வைத்த கடைக்கார முதலாளியின் 'தடை உத்திரவு' கிளம்பியது. பாலன் சோர்ந்தான்; இறங்கினான்; மீண்டும் நடந்தான்.

மறுபடியும் ஒருயோசனை."நல்ல வேளை! பணத்தைச் செலவு செய்யப் போனேனே! முதன் முதலாக சம்பாதித்திருக்கிறேன் — அதை அப்படியே அம்மாவின் கையிலே கொடுத்து வாழ்த்தச் சொல்ல வேண்டாமா? அவள் முழு மகிழ்ச்சியுடன் வாழ்த்தினால், அப்புறம் மேலே மேலே சம்பாதிக்கலாம். ஊரிலே புதிய 'பாக்டரி' ஒன்று கட்டுகிறார்களாம். எப்படியாவது அதிலே ஒரு வேலை வாங்கிவிட்டால்...அப்புறமென்ன எதற்கும் அம்மாவின் ஆசிவேண்டும்..."—பாலனின் சிந்தனை எங்கேயோ ஓடிக்கொண்டிருந்தது. இப்போது அவன் கண்முன்னே அம்மா நின்றாள். குடிசையை நோக்கி வேகநடை போட்டான்.

ஆற்றுப் பாலம் — தாண்டினால் சிறிது தூரத்தில் குடிசை. பாலத்தின் மேல் பாலன்!

அப்போது...சற்றும்எதிர்பாராத வண்ணம் ஒரு அலறல்! "ஐயோ! மகனே, மகனே!"—என்ற நிலைக் கதறல்! பாலன் திடுக்கிட்டான். பாலத்திலிருந்து எட்டிப் பார்த்தான். விளக்கு வெளிச்சம் உதவியது. ஆற்றுப் படிக்கட்டில் ஒரு அம்மா!

பாலன் தடதடவென்று படிகளில் இறங்கி ஓடினான்.'என்ன'ம்மா?...என்ன நடந்தது?' என்று பதட்டத்துடன் கேட்டான்.

"அதோ, என் மகன்—என் மகன்! கால் வழுக்கி தண்ணீரிலே..."—அவள் முடிக்கவில்லை. பாலன் பார்த்தான். ஒரு சிறுவனின் தலை தெரிந்தது ஆற்று நீரில்!

அவ்வளவுதான்! பாலன் பாய்ந்தான் ஆற்றில்! நீந்தினான். உயிரோடு போராடிக் கொண்டிருந்த அந்தக் குழந்தையை நோக்கி நீராவிப் படகுபோல் நீந்தினான்! எதிர்பாராத உதவி-வெற்றிதான்!

ஈரமாகிவிட்ட சட்டையைக் கழற்றிப் பிழிந்தான் பாலன். கால்கள் சோர்ந்து விட்டன. வீட்டு நினைவு வந்து விட்டது. படிகளைக் கடந்தான். பாலத்தைத் தாண்டினான்.குடிசையை நெருங்கினான்.

அம்மா குடிசை வாசலில்தான் நின்றாள் அழுது கொண்டு. பக்கத்திலே தங்கை! பாலன் பயந்தான். "என்ன'ம்மா? ஏன் அழுகிறாய்?"—அவனுக்கு ஒரே படபடப்பு-துடிதுடிப்பு!

"இதைப் பார்!..."—அம்மா குடிசையின் கதவைக் காட்டினாள், விக்கிக் கொண்டே!

○ தொடர்ச்சி 8-ம் பக்கம்

'எழுத்தாணி'

நரசிம்மன். ஆடுதுறை.

(?) நம்மை 'வெம்பல்' என்கிறார்களே; அவர்கள் யார்?

அழுகல்.

மு. கந்தசாமி; அம்மாசத்திரம்.

(?) அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு உள்ள நிதி தற்போது எவ்வளவு?

இதற்கு பிர்லாவின் பாங்கிக் கணக்கைப் பார்த்தபிறகுதான் பதில் சொல்ல முடியும்.

ஆறுமுகம்; கவுண்டம் பாளையம்.

(?) மாயை என்றால் என்ன?

காமராசரைச் சுற்றியிருக்கும் மூபேனி!

சீ. கோபாலன்; அகரம் கிராமம்.

(?) உலகம்சுற்றிய நேருவின் பொழுது போக்கு என்ன?

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:

(●) எம். எல். ரங்கராசன், பெரிய புதூர், வடவல்லி (அஞ்சல்) [கோவை மாவட்டம்]

வெளிநாடுகளுக்கு யானைக் குட்டிகள் அனுப்புவது; தமிழ் நாட்டுக்கு வந்து கோகிலவாணியின் சங்கீதம்கேட்பது–இவைதான்!

கந்தசாமி; ஏரிப்பாளையம்.

(?) நரம்பில்லா இலை எது?

வசவாளர் நாக்கு!

(?) இலையில்லா மரம் எது?

திராவிட இயக்கம் வீசிய இடியினால் பட்டுப் போய்க்கொண்டிருக்கும் ஆச்சாரியார்!

இராம. நடராசன்; சென்னை-14.

[?] தி. மு. க. வை ஒழித்து விடுகிறேன்—என்று தொண்டை கிழியக் கத்திக் கொண்டிருந்தோரின் முயற்சி என்னவாயிற்று?

ஆற்றில் கரைத்த புளியாயிற்று!

மு. திராவிடப்பித்தன்; சிங்கை.

(?) ஆச்சாரியார் காமராசரை விரோதித்துக் கொள்ளாமலிருந்தால் என்ன நடந்திருக்கும்?

காமராசர் முதலமைச்சராகியிருக்க மாட்டார்.

குறள்தாசன்; அம்பாசமுத்திரம்.

(?) உலகத்திலுள்ள முட்டாள்களில் தலை சிறந்தவன் யார்?

முட்டாளுக்கு 'தலை' எப்படி சிறப்பாக இருக்கும்?

என். அப்பாவு; விக்கிரவாண்டி.

(?) மந்திரி சுப்ரமணியம் முதன் மந்திரி பதவிக்கு வந்தால் பெரியார் அவரை ஆதரிப்பாரா?

ஆதரிக்கலாம்; 'காமராசர் மந்திரம்' சுப்ரமணியத்துக்குத் தெரிந்திருந்தால்!

(●) ரங்கராசன்; வடவல்லி

(?) மரணத்திற்குப் பின் ஏதோ ஓர் அலாதியான அமைதி இருப்பதாகச் சொல்கிறீர்களே; அது மரணத்திற்கு முன் இருக்காதா?

ஏன் இருக்காது? இப்போது கம்யூனிஸ்ட் கட்சியில் அந்த அமைதிதான் இருக்கிறது.

எம். பஞ்சவர்ணம்; அரையபுரம்.

(?) பணம் உள்ளவர்களும் சில சமயங்களில் கஷ்டப் படுவதன் காரணமென்ன?

அந்த ஆசாமி தேர்தலுக்கு நின்றிருப்பார்; அதனாலிருக்கும்!

டி. எஸ். கோபால்; பெங்களூர்.

(?) ஆவடி சோஷலிசம்இப்போது எங்கே யிருக்கிறது?

டாட்டாவின் காலடியிலே!

திராவிடமணி; சென்னை.

(?) ஏழை சிந்தித்தால் என்ன நடக்கும்?

ஏழடுக்கு மாளிகையிலே வெடிப்பு ஏற்படும்!

(?) செல்வத்துள் சிறந்த செல்வம் எது?

'வெல்வோம்'என்ற எஃகு மனம்!

விதாதேவன்; தாரமங்கலம்.

[?] இக்கால காங்கிரசிற்கும், காந்தியத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

கருகிய மலருக்கும் மணத்திற்கும் உள்ள தொடர்புதான்!

மா. தங்கைமணியம்; அன்னர் திருச்சேறை.

[?] தற்போது நேரு கும்பகோணத்துக்கு விஜயம் செய்யப் போகிறாராமே; ஏன்?

ஓமாந்தூரார் காலத்திலே அங்கு நடைபெற்ற தடியடிப் பிரயோகம் கோவாவில்கூட நடக்கவில்லை — என்பதை நேரில் விசாரித்துத் தெரிந்துகொள்வதற்காக இருக்கலாம்.

சி. இராதாகிருஷ்ணன்; வேட்டவலம்.

(?) பள்ளிகளில் மதவேறுபாடு ஒழிக்கத் தொண்டர் படை அமைக்க நம் சக்தியைப் பயன்படுத்தக் கூடாதோ?

எங்கள் மாணவர் பட்டாளம் அதைத்தானே செய்து வருகிறது!

த. கணேசன்; யாழ்ப்பாணம்.

[?] எழுத்தாணியாரே; தங்கள் பேனாவுக்கு என்ன 'மை' விடுகிறீர்கள்?

தூய் 'மை'; நல்ல தன் 'மை'!

[?] பஞ்சாமிர்தம் சாப்பிட்டால்.?

நேருவின் பஞ்ச சீலத்தைப் போல நிச்சயம் புளிக்காது!

துரை. முருகேசன்; காரமடை.

[?] அரசியல் மண் குதிரைகள் யார்?

இப்போது காங்கிரஸ் நம்பியிருக்கும் தேர்தல் அபேட்சகர்கள்!

பி. நாகராஜன்; நாகர்கோயில்.

(?) அரசியல் உலகில் காமராஜர் பெற்ற புதிய படிப்பினை என்ன?

"மௌனம் சர்வார்த்த சாதகம்!"

[?] அண்மையில் நடக்க இருக்கும் மாநில மாநாட்டுக்கு நேரு வந்தால் அவர் மனதிலே என்ன தோன்றும்?

"நான் இந்தியாவில் நின்று கொண்டிருக்கவில்லை; ஐயோ- திராவிடத்திலே அல்லவா நின்று கொண்டிருக்கிறேன்!" என்ற எண்ணம் நிச்சயம் தோன்றும்!

அ. சு. நடராசன்; அக்கிரார சாமக் குளம்.

[?] எதிர்காலத்தில் இராமயணத்தைப் படிப்பவர்கள் யார்? அதைக் கேட்பவர்கள் யார்?

பத்து அவதாரங்கள் எடுத்ததாகச் சொல்லப்படும் மகாவிஷ்ணு, பதினோராவது அவதாரமும் எடுத்து வந்தால், தனது சரித்திரத்தைப் படிக்கலாம்; கேட்கலாம்; பரவசம் கொள்ளலாம்!

எம். அப்பர்; குறிஞ்சிப்பாடி.

[?] கோவில் அர்ச்சகர்கள் பூஜை செய்யும்போது சுவாமியிடம் சொல்லும் மந்திரம் என்ன?

கொஞ்சம் பொறுத்திருங்கள்; குன்றக்குடியார் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார். வெற்றி கிடைத்தால் அந்தப் 'பாமாலை'யைத் தமிழிலேயே கேட்கலாமே!

காந்திநாதன்; கோட்டகுளம்.

(?) கண் இழந்தவன் உலகத்தில் இருப்பதால் யாருக்கு என்ன பயன்?

சினிமா ஒழிப்புக் கட்சியில் அங்கத்தினர் தொகை அதிகமாகும்!

✶

பிறப்பு

சென்ற 11-9-55 அன்று சென்பகராமன்புதூர் தோழர் மாடசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி பார்வதியம்மாள் ஒரு ஆண் மகவுக்குத் தாயானார்கள். குழந்தைக்கு 'நெடுஞ்செழியன்' என்று பெயரிடப்பட்டது.

✶

'முரசொலி'

இலங்கைத் தோழர்களுக்கு:

ஆண்டு சந்தா	6--0--0
6--மாத சந்தா	3--8--0

இலங்கை நேயர்களிடமிருந்து வி. பி. பி. மூலம் சந்தா தொகை பெற்றுக் கொள்ள இயலும்.

வெளிநாடு

ஆண்டு சந்தா	7-0-0
ஆறுமாத சந்தா	4--0--0

மலேயா நேயர்கள், சந்தா தொகைக்கு 'கிராஸ்' செய்த பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் அனுப்ப வேண்டுகிறோம்.

மூன்று மாத சந்தா கிடையாது.

விரைவில் வருகிறது !

நனி சுவை அமுதம்!

கனிமரச் சோலை!

நாவலர் படைக்கும் இலக்கிய விருந்து!

கலித்தொகை தரும்

காதற் காட்சிகள்

(இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.)

திராவிடப் பண்ணை,

தெப்பக்குளம் ::: திருச்சி.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.